விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

## Valampurii

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாவில் கண்டத்தில் முதன்மையாக நிறுவி சாலையிலிருந்து தயாரிக்கப்படுகிறது
சீமெந்து

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி 26 | சனிக்கிழமை (12.11.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 328

# யாழ்ப்பாணச் சிறைச்சாலையிலிருந்து இரு கைதிகள் ஆயுத முனையில் கடத்தல்

## நேற்று மாலை துணிகரச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் இருந்து இரண்டு கைதிகள் ஆயுதமுனையில் கடத்தி செல்லப்பட்டனர். இச்சம்பவம் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.**

**நேற்று பிற்பகல் 4.30மணியளவில் பார்வையாளர்கள் போன்று உள்ளே நுழைந்த இருவர் கைத்துப்பாக்கியைக் காட்டி சிறைச்சாலைக் காவலர்களை அச்சுறுத்திவிட்டு இரண்டு கைதிகளையும் கடத்தி சென்றுள்ளனர்.**

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் சிறைச்சாலையினுள் புகுந்து சிறைச்சாலைக் காவலர்களை அச்சுறுத்தி; வானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து குறிப்பிட்ட இரு கைதிகளையும் அழைத்துக் கொண்டு தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

கடத்தித் செல்லப்பட்ட இவர்களில் ஒருவர் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட கமல் என்றும் மற்றையவர் பலாலி உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்ட மணாளன் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றிலும் மற்றையவருக்கு மல்லாகம் நீதி மன்றிலும் வழக்கு நிலுவையில் உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதே வேளை இரண்டு கைதிகளும் ஆயுத முனையில் கடத்தப்பட்ட சம்பவத்தையடுத்து சிறைச்சாலையை சுற்றி பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் போடப்பட்டுள்ளனர். அவ்வீதியூடாக செல்வோர் தீவிர சோதனைக்கு உட்படுத்தபட்டனர்.

தப்பிச் சென்ற இருவரையும் மற்றும் கடத்தி சென்றதாக கூறப்படும் இருவரையும் தேடி பொலிஸார் வலைவிரித்துள்ளனர்.

இச்சம்பவத்தினையடுத்து சிறைச்சாலையைச் சூழவுள்ள பகுதிகளில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

(ச-43,8,4)

## பிரதமரின் ஹெலி திடீர் தரையிறக்கம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அம்பாறைக்குச் சென்ற பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பயணம் செய்த ஹெலி நேற்று வயல் வெளியில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

இரத்தினபுரியில் நிலவிய சீரற்ற கால நிலை காரணமாகவே ஹெலி தரையிறக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் கால நிலை சீரானதைத் தொடர்ந்து பிரதமர் அம்பாறைக்குச் சென்று தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் பங்கேற்றார்.

கல்முனையில் முஸ்லிம்கள் மத்தியில் உரையாற்றிய அவர், முஸ்லிம்களின் உரிமைகளுக்காக தான் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் கல்முனை விஜயத்தினையடுத்து அங்கு இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்பு ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ச)

## திருநெல்வேலியில் சூடு ; பொலிஸ் கான்ஸ்டபில் பலி

யாழ்.திருநெல்வேலிச் சந்தைப்பகுதியில் வைத்து பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 3.45 மணியளவில் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில்படுகாயமடைந்த அவர் யாழ். போதனாவைத்தியசாலையில்அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட போதும் அங்கு சிகிச்சை பலனளிக்காமையினால் அவர் மரணமடைந்தார். அச்சுவேலி பொலிஸ் நிலையத்தை சேர்ந்த எஸ்.சேனநாயக்க (வயது-38) என்பவரே மரணமானவராவார்.

திருநெல்வேலிச் சந்தையில் பொருட்கள் கொள்வனவு செய்து விட்டு திரும்பும் வழியிலேயே அவர் சுடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(ச-132,133,43,8,4)

## தேர்தலைப் பகிஷ்கரிக்க வவுனியாவில் அழைப்பு

(வவுனியா)

ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு வவுனியாவிலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றியம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

ஆட்சிபீடம் ஏறியோர் யாவரும் தமிழர்களைத்தொடர்ந்து நசுக்குவதிலும் எமது தாயகத்தை பாரிய அழிவுக்குட்படுத்துவதிலும் கவனம்செலுத்தி தங்கள் நலன்களிலும் சிங்கள தேசத்தின் நலன்களிலும் அக்கறைகாட்டினார்கள்.

இவ்வாண்டில் நடைபெறும் இந்த ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் மகிந்த, ரணில் ஆகியோரும் தங்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் எழுச்சியுடன் நடைபெற்ற தமிழ் மாணவர்களின் மாநாடு

## ஆயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தமிழ் மாணவர்களின் எழுச்சி மாநாடு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டனர். யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வுக்கு தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் சி.குணேந்திரன் தலைமை தாங்கினார்.

நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை யாழ்.மத்திய கல்லூரி மாணவன் சிவகுருநாதன் ரங்கேஸ்வரன் ஏற்றினார்.

பொதுச் சுடரினை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ், மானிப்பாய் உயரப்புலம் வித்தியாலய அதிபர் திருமதி ரே.சண்முகரத்தினம், யாழ்.கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி க.தனபாலன், வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ஆகியோர் பொதுச் சுடரினை ஏற்றினார்கள்.



வாழ்த்துரையினை யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் ,வணிகத்துறைத்தலைவர் க.தேவராஜா ஆகியோர் நிகழ்த்தினர். பாடசாலைகள் ரீதியாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் உட்பட ஆயிரக் கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழக கல்வியியலாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விப் புலன் சார்ந்தவர்களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டு மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பான கருத்துரைகளை எடுத்துரைத்தனர். தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கும் 6 முக்கிய விடயங்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பர்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவே நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தென்கிழக்கு ஆசிய நாடுகளை பறவைக்காய்ச்சலை எதிர்கொள்ளத் தயாராகுமாறு ஐ.நா அறிவிப்பு

(கொழும்பு)

ஆட்கொல்லி நோயான பறவைக்காய்ச்சலை எதிர்கொள்வதற்காக இலங்கையிலும் சீரான திட்டமொன்றை செயல்படுத்த வேண்டுமென்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் இந்தத் தேவையை உணர்ந்து தேவையான பின்னணியை உருவாக்கியிருப்பதாக ஐக்கியநாடுகள் சபையின் உணவு விவகார அமைப்பு அறிவித்துள்ளது.

பறவைக்காய்ச்சல் நோய் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் வேகமாகப் பரவிவருகின்றது. இதன் காரணமாக சமூக பொருளாதார ரீதியான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. உணவு விவசாய ஸ்தாபனம் அறிக்கை விடுததுள்ளது.

பறவைக்காய்ச்சல் வைரஸ் தத்தமது நாடுகளுக்கு பரவுவதைத் தடுக்கும் நோக்கில் ஒவ்வொரு நாடும் தனித்தனியாகத் தயாராக வேண்டும். பிராந்திய மட்டத்திலும் திட்டங்கள் வகுக்கப்படவேண்டுமெனவும் அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறேனும் இலங்கையில் பறவைக்காய்ச்சல் பரவும் அபாயம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது என சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். இதற்கான தடுப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)

## மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகள் முல்லை மாவட்டத்தில் தீவிரம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகள் துரிதமாக இடம்பெற்று வரு கின்றன.

இதற்கான ஏற்பாடுகள் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் தலைமையில் நடைபெற்று வருகின்றன. அத்தோடு மாவீரர் நாளைச் சிறப்பாக நடத்துவது சம்பந்தமான கருத்தரங்குகளும் நடைபெற்று வருகின்றன.

மேற்படி கருத்தரங்குகள் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, விஸ்வமடு, மல்லாவி, துணுக்காய், முள்ளியவளை மாங்குளம் கரிப்பட்ட முறிப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களில் இடம்பெற்றன.

இக் கருத்தரங்குகளில் மாவீரர் செயற்பாட்டுக்குழுவும் தெரிவு செய்யப்பட்டு இதற்கான ஏற்பாடுகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் மாவீரர் துயிலும் இல்லங்களைத் தூய்மைப்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. (ற)

## செயலமர்வு

(புங்குடுதீவு)

யுனிசெப் நிறுவன செயற்றிட்டத்தின் அனுசரணையில் தீவகக் கோட்ட தரம் 10 தமிழ், கணித ஆசிரியர்களுக்கான திறன் விருத்தி செயலமர்வு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளது. (ற126)

## இராசிபலன்

**12.11.2005**
**(ஐப்பசி 26, சனிக்கிழமை)**
**ஏகாதசி பிற்பகல் 12.17 மணிவரை**
**உத்தரட்டாதிபின்னிரவு3.23மணிவரை**
**இராகுகாலம் 9.06-10.36 மணிவரை**
**சுபநேரம் 3.06-4.36 மணிவரை**
**உத்தான ஏகாதசிவிரதம்.**

| | |
|---|---|
| மேடம் | காரிய அலைச்சல், சுபசெலவு, உறவினர் மனஸ்தாபம், சயன சுகக்குறைவு. |
| இடபம் | எடுத்த காரியம் கைக்கூடும், போசன சுகம், குடும் மகிழ்ச்சி, கீர்த்தி. |
| மிதுனம் | அதிகாரம், கடினமுயற்சி, போசன சுகம், தூரதேச செய்தி. |
| கடகம் | பிரயாணம், பிதாசிந்தை, புதிய திட்டம், சரீரப்பிரயாசை |
| சிங்கம் | முயற்சி தாமதம், போசன நன்மை, நண்பர்கள் சந்திப்பு, அபகீர்த்தி. |
| கன்னி | சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய சித்தி, விருந்துபசாரம், பொருள்சேர்க்கை. |
| துலாம் | காரிய நன்மை, பொருள்வருவாய், புதிய விடயம், உடல் நலம். |
| விருச்சிகம் | புத்திரரால் கவலை, பணவிரயம், முயற்சி தாமதம், ஆரோக்கியக் குறைவு. |
| தனுசு | மனச்சோர்வு, புதிய முயற்சி, திடீர் நன்மை, தாய்வழியுறவு. |
| மகரம் | அன்னியர் சந்திப்பு, எடுத்த காரியம கைக்கூடும், பொருள் சேர்க்கை, பெருமையடைதல். |
| கும்பம் | கடின வார்த்தை, முயற்சி தாமதம், பண விரயம், போசன சுகக்குறைவு. |
| மீனம் | கற்பனை மிகுதி, நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, தேக நலன். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
**- வளவன்**

## சிறுவர்களின் நடிப்புத் திறனை மெருகூட்ட-உதவும் 'இமயம்'

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நாடகத்துறையில் கால் பதித்து நானூறுக்கு மேற்பட்ட சமூக, வானொலி நாடகங்களை எழுதி தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்துள்ள கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் பதினொரு நவீன நாடகங்களின் தொகுப்பே நூலாசிரியரின் நாடகச்சேவையின் வெள்ளிவிழா மலராக வெளிவந்துள்ள 'இமயம்'.




ஆசிரியராகப் பணியாற்றி, மாணவர்களது மன இயல்புகளைத் துல்லியமாக அறிந்த இந் நூலாசிரியர் சுந்தரம்பிள்ளை தனது வானொலி நாடகங்களை மாணவர்களுக்கேற்ற விதத்தில், அவர்கள் அந் நாடகங்களைப் பயன்படுத்திப் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தில் தனது நாடகங்களை அமைத்திருக்கிறார். ஆனால் மாணவர்களுக்கான நாடகங்களே இல்லையென ஒரு புறத்தில் கூச்சலிடுபவர்கள் இவரது நாடகங்களைத் திரும்பிக் கூடப் பாராமல் இருக்கும் ஒரு வசித்திர நிலையைத்தான் இன்று காணக்கூடியதாக இருக்கிறது.

'தமிழ்ப் பிள்ளைகள் தமிழ் மொழி கற்பதற்காக அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட எந்த ஒரு பாட நூலிலும் நாடகம் பற்றிய ஒரு கட்டுரை தானும் இல்லை.

பாடநூல்களில் சகுந்தலையையும், ஏகலவனையும், சங்க காலப் புலவர்கள் மன்னர்களிடம் கூழுக்குப் பாடிச் சென்ற 'கதைகளையும், மிருகங்களின் கதைகளையும் நாடகமாகப் போட்டிருக்கிறார்கள்.பாட விதான சபையினர்' என நூலாசிரியர் தனது முன்னுரையில் குறிப்பிட்டிருப்பதில் உண்மை இல்லாமல் இல்லை. அரைத்த மாவையே திரும்பவும் அரைக்கும் இத் தகையவர்களது மனம் மாறினால்தான் மாணவர்களிடையே புதிய எழுச்சியைக் காண முடியும்.

வாழ்க்கையில் அன்றாடம் நடைபெறும் சம்பவங்களையும் நம்மிடையே சாதாரணமாக உலாவிவரும் சாமானியர்களையும் கொண்டு பேச்சுத் தமிழில் இவரது நாடகங்கள் மக்களைச் சென்றடைந்து பயன்படுவதற்கு 'இமயம்' உறுதுணையாக இருக்குமென நம்புகிறோம்.

சிறுவர்களுக்கும் மாணவர்களுக்கும் நடிப்பதற்கேற்ற நாடகங்களை எழுதியுள்ள அராலியூர் சுந்தரம்பிள்ளையின் திறமையை கல்விசார் துறையினர் இன்னமும் அறியாமலிருப்பது துரதிஷ்டமே!

**நூல்:-** இமயம் (மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான 11 நாடகங்கள் கொண்ட தொகுப்பு)
**ஆசிரியர்:-** கலாபூஷணம் அராலியூர் சுந்தரம்பிள்ளை B.A. (இலங்கை) Dip-ni-ed
**விலை:-** ரூ.150/=

**துரையரசன்**

**திறனாய்வுக் களம்**

## பொலிஸ் அதிகாரிகளுடன் ஐஸ் மஞ்சுவுக்கு நெருக்கம்?

(கொழும்பு)

இராணுவ புலனாய்வு அதிகாரி லெப்.கேணல் ரிஸ்வி மீடினின் கொலையாளி ஐஸ் மஞ்சுவுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

அண்மையில் திருமலையில் கைதுசெய்யப்பட்ட ஐஸ் மஞ்சுவின் வர்த்தக நண்பர் ஒருவர் இத்தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

அவர்கள் இருவரும் பொலிஸ் நண்பர்களுடன் இணைந்து சட்டவிரோத செயற்பாடுகளை மேற்கொண்டதாகவும் அந்த நபர் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

ரிஸ்வி மீடினின் கொலைக்கு முன்பாக பலமுறை கிரிபத் கொடவில் உள்ள ஐஸ் மஞ்சுவின் வீட்டிற்கு வந்து சென்றுள்ளதாகவும் தற்போது தெரியவந்துள்ளதாக பொலிஸ் செய்திகள் தெரிவிக்கின்றன. (ற)

## கூட்டமைப்பின் முடிவை அடுத்து பங்குச் சந்தை பாதிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் அக்கறை செலுத்த வேண்டியதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்ததால் கொழும்பு பங்குச் சந்தை பாதிப்படைந்துள்ளது.

ஐக்கியதேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை தமிழர் ஆதரிப்பார்கள் என்று நம்பிக்கை கொண்டிருந்த பங்கு வாத்தகம் நேற்று முன்தினம் கூட்டமைப்பினர் வெளியிட்ட அறிவிப்பால் பாதித்துள்ளதாக வர்த்தக நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு அனைத்து பங்கு வர்த்தகச் சுட்டெண் 0.42வீதம் சரிந்தது. முன்னைய நாள் சுட்டெண்ணை விட 10 புள்ளிகள் சரிந்துள்ளது.

மிலங்கா பங்குச் சந்தை சுட்டெண் 0.92 வீதம் சரிந்தது. முன்னைய நாள் சுட்டெண்ணைவிட இது 29 புள்ளிகள் சரிந்திருந்தது.

'அனைத்து முதலீட்டாளர்களும் சூழ்நிலையை அவதானித்துக் காத்திருக்கிறார்கள். புதிதாக வெளியாகும் கருத்துக் கணிப்பு முடிவுகளால் பங்கு வர்த்தகம் ஊக்கமடையும்' என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ற)

## ரணிலின் கட்டவுட்டுகளுக்கு தீவைப்பு

(பதுளை)

பதுளையில் அமைக்கப்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் கட்டவுட்டுக்கள் இனந்தொியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சியின் இளைஞர் முன்னணியின் பதுளை அலுவலகத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த படங்கள் மற்றும் அலங்கார வளைவுகள் கடந்த புதன்கிழமை அதிகாலை 3 மணியளவில் இனந்தெரியாதோரால் தீவைக்கப்பட்டுள்ளன.

பதுளை இத்தகொட பகுதியில் அமைந்துள்ள இந்த அலுவலகத்தின் முன்பாக ரணில் விக்கிரமசிங்கவின் உருவப்படங்கள், அலங்கார வளைவுகள் மற்றும் பச்சை வர்ணக் கொடிகள் என்பன அமைக்கப்பட்டிருந்தன. இனந்தெரியாத குழுவினர் இக் கொடிகள் மற்றும் தோரணங்களை அறுத்தெறிந்துள்ளதுடன் கட்டவுட்கள் அனைத்தையும் தீவைத்து எரித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேற்படி இளைஞர் முன்னணியின் பதுளை மாவட்ட அமைப்பாளர் ஹரேன் பெர்னாண்டோ, பதுளை பொலிஸ் நிலையம், மாவட்ட தேர்தல் அலுவலகம் மற்றும் தேர்தல் கண்காணிப்புக்குழு ஆகியவற்றில் முறைப்பாடு செய்துள்ளார். (ற)

## மோசடிகள் இடம்பெற்றால் மீள் வாக்குப்பதிவு நடத்தப்படும்

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பின் போது மோசடிகள் இடம்பெற்றால் முடிவுகள் வெளியிடுவது நிறுத்தப்பட்டு மோசடிகள் இடம்பெற்ற இடங்களில் மீள் வாக்கு பதிவு நடாத்தப்படுமென்று தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.


தேர்தல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உதவித் தேர்தல் ஆணையாளர்கள், தெரிவத்தாட்சி அதிகாரிகள் ஆகியோர்களுடனான சந்திப்பிலேயே தேர்தல் ஆணையாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மோசடிகள் இடம்பெறுவதைத் தடுக்கும்முகமாக உள்நாட்டு வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் 1500பேர் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனினும் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை அமைப்பது தொடர்பாக உயர்நீதிமன்றத் தீர்ப்புக் குறித்தும் இச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

# தமிழ் மக்களுக்கு நன்மை எதுவும் கிடைக்காத ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்போம்!



(சாவகச்சேரி)

ஜனாதிபதித் தேர்தலால் தமிழ் மக்களுக்கு எதுவித நன்மையும் கிடைக்கப்போவதில்லை. எனவே ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்கு மாறு கோயிற் குடியிருப்பு மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் அச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழின அழிப்பையே தமது அரசியல் தளமாகக் கொண்டுள்ள ரணிலும், மஹிந்தவும் ஸ்ரீலங்கா தேசத்தின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். இவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமாதானத் தீர்வுக்கான எந்தவொரு முன்வைப்புக்களும் இல்லை.

ரணிலிடமோ மஹிந்தவிடமோ சமாதானத் தீர்வுக்கான ஆக்கபூர்வமான திட்டங்கள் எதுவுமேயில்லை. இவர்கள் இருவருமே தேர்தல் மேடைகளில் இனவாதப் பிரசாரமே மேற்கொள்கின்றனர்.

நவீன படையை உருவாக்கி பலம் பெறுவதென்றும், இலங்கைத் தீவு முழுமைக்கும் சிங்களக் கொடியை பறக்கவைப்பதென்றும் கிழக்கிற்கென புறம்பான பொலிஸ் படையை அமைப்பதென்றும், அமெரிக்க இந்தியப் படைகளை இறக்கி விடுதலைப் புலிகளுடன் மோதவிடுவதென்றும் ரணிலும் அவரது கட்சியினரும் கூப்பாடு போடுகின்றனர். ஊடகங்களில் ரணிலின் முகத்திரை கிழிகிறது.

மஹிந்தவும் கூட்டுக் கட்சிகளும் அதிதீவிர தமிழின அழிப்புக் கருத்துக்களை விதைக்கின்றனர். இவர்கள் படுமோசமான சிங்கள பௌத்த பேரினவாதிகள். சமாதானத்திற்கான போரை நடத்தி தமிழினத்தை மோசமாகத் தாக்கியவர்கள்!

மிக நீண்டகால தமிழின அழிப்புக்களைத் தமது வரலாறாகக் கொண்டவர்களாகிய இவர்கள் இருவரது கரங்களும் குருதி தோய்ந்தவை என்பதை எவராலும் மறுக்கமுடியாது. இவர்கள் இருவருமே விரும்பியிருந்தால் மெய்யான சமாதானத் தீர்வை எட்டியிருக்க முடியும்.


ஆனால், இவர்களே கேடுகெட்ட பேரினவாதிகளாக இருக்கும்போது, சமாதானம் பற்றி இவர்கள் கூறுவது பொய்யைத் தவிர வேறு எதுவுமில்லை.

ஜனாதிபதித் தேர்தலால் தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைக்கப்போகும் நன்மைதான் என்ன? எதுவுமேயில்லை!

தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் நாம் கேட்டுக்கொள்கிறோம். சிங்களதேசத்திற்கும் அனைத்துலகத்திற்கும் ஒரு சேதி சொல்வோம்.

பேரினவாத போர்க்கோலம் பூணும் ஸ்ரீலங்கா தேசத்து அரசியல் குறித்து எமக்கு அக்கறையில்லை. அதன் மூலம் எமக்கு விடிவுமில்லை. ஜனாதிபதித் தேர்தல் அவர்களுடன் போகட்டும். சிங்கள தேசம் ஜனாதிபதித் தேர்தலை எம்மீது திணிக்க நாம் அனுமதிக்கமாட்டோம்.

எனவே, நாம் ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க மாட்டோம்! வாக்களிப்பு நிலையங்களுக்குப் போகமாட்டோம்! தேர்தலைப் புறக்கணிப்போம்! எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-108)



## குளவி கொட்டியது

கள் இறக்குவதற்காக பனை மரத்தில் ஏறிய ஒருவரை காவோலைக்குள் இருந்த குளவிகள் ஒன்றாகச் சேர்ந்து கொட்டின.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் மட்டுவில் தெற்[illegible] சேர்ந்த கந்தன் செல்வராசா (வயது- 36) என்பவரே இதனால் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (ற-108)

## வாக்காளர் அட்டைகள் விநியோகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசத்துக்கான வாக்காளர் அட்டைகளில் 15,500 வரையானவை விநியோகிக்கப்பட்டு விட்டன.

இடம்பெயர்ந்தவர்களின் வாக்காளர் அட்டைகள் சாவகச்சேரி தபாலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றை உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு சாவகச்சேரி அஞ்சல் அதிபர் கேட்டுள்ளார். (ற-108)



**சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களது உளநல விருத்திக்கான விளையாட்டு உபரணங்கள் வலிகாமம் வலையத்தைச் சேர்ந்த 34 பாடசாலைகளுக்கு உலக சாரணர் அமைப்பின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் ஊடாக காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்தின் அனுசரணையுடன் அண்மையில் வழங்கப்பட்டது.**

**இதில் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உபகரணங்களை வழங்க மாவட்ட திரிசாரணர் குழு உதவி மாவட்ட ஆணையாளர் ப.அஜித்குமார் பெற்றுக்கொண்டார்.**

### இந்திய - இலங்கை மீனவர் நலன் கருதி

# பாக்கு நீரிணைப் பகுதியில் இரு நாடுகளும் கூட்டுக் காவல்

(சென்னை)

இந்திய - இலங்கை கடற்படைகள் இணைந்து பாக்குநீரிணைப் பகுதியில் கூட்டு சுற்றுக்காவல் நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக இந்திய கடற்படையின் கிழக்குக் கடற்படை பிராந்திய தலைமைத் தளபதி வைஸ் அட்மிரல் சுரேஸ் மேத்தா தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் பேசிய வைஸ் அட்மிரல் சுரேஸ் மேத்தா,

இருதரப்பு மீனவர்களும் தத்தமது எல்லைகளைத் தாண்டி மீன்பிடிப்பதைத் தடுக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேவைப்படும் நிலையில் இரு நாடுகளிடையே இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாக்கப்படும்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பகுதியில் கச்சதீவுப் பிரதேசத்தில் எல்லை தாண்டிச் செல்வதால் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது அதிகரித்தது. இதையடுத்து கடந்த இரு மாதங்களாக இந்த சுற்றுக்காவல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்திய மீனவர்களைப் பொறுத்தவரையில் கச்சதீவுப் பிரச்சினை உணர்வுபூர்வமான பிரச்சினைதான். ஆனால் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி இலங்கைப் பகுதிக்குள் செல்வதும் வருத்தத்திற்குரியதே.

கச்சதீவுப் பகுதியில் இந்திய மீனவர்கள் எல்லைதாண்டிச் செல்வது தொடர்பான விடயத்தில் இந்திய மீனவர்களிடம் மனிதாபிமான அடிப்படையில் அணுகி எல்லை தாண்டுதல் விடயங்கள் பற்றி பயிற்றுவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (ற)

# யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீளாய்வுக்கு இந்தியாவின் உதவி பெறப்படும்

### - பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியாகத் தான் தெரிவுசெய்யப்பட்டால் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வேன் என்று சுதந்திரக் கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

புத்தளத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

விடுதலைப்புலிகளுடனான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வதன் மூலம் யுத்த நிறுத்த ஒப்பந்தம் என்ற பெயரில் எதிர்காலத்தில் எந்த ஒரு பயங்கரவாதச் செயலும் நடைபெறாமல் தடுக்கமுடியும். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்கிறபோது இந்தியா உள்ளிட்ட பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் உதவியை நாம் கோருவோம்.

புத்தளத்தில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையினராக 50 வீதத்தினராக இருந்தபோதும் 30 வீத சிங்களவர் மற்றும் 20 வீத தமிழர்களுடன் மத நல்லிணக்கத்தோடு வாழ்ந்து வருகின்றனர். புத்தளத்தைப் போல் இந்த நாடு முழுமையும் ஒரே குடும்பமாக வாழவேண்டும் என்பதே எமது நோக்கம்.

என்னை ஒரு இனவாத முகாமின் பிரதிநிதியாக ஐக்கிய தேசியக் கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர். எனது பாடசாலை நாட்களிலிருந்தே எனக்கு தமிழ், முஸ்லிம் நண்பர்கள் உண்டு. இன்றும் அவர்கள் எனது நண்பர்களாகவே இருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் முஸ்லிம் அகதிகளுக்கான எதுவித செயற்பாடும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு அரசாங்கத்தின் அமைச்சர்கள் அலவி மௌலானா, பௌசி ஆகியோர் வீடமைப்பு உள்ளிட்ட நலத்திட்டங்களைச் செயற்படுத்த முன்னெடுத்தனர்.



முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தால் முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு நெற் செய்கைகளுக்காக அவர்கள் வரி செலுத்துகின்றனர்.

ஈராக்கில் முஸ்லிம் சமூகத்தினர் மீது குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டுவரும் அமெரிக்காவை நியாயப்படுத்துகிறவர் ரணில் விக்கிரமசிங்க. பாலஸ்தீனத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு நாம் ஆதரவு கொடுத்தோம். நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமே இருந்த காலத்தில் பாலஸ்தீனத்தின் தலைவர் மறைந்த யசீர் அராபத். ஸ்ரீலங்கா வருகைக்கான ஒழுங்குகளை மேற்கொண்டோம் நாம். எமது அரசியல் இலாபங்களுக்காக முஸ்லிம்களை நாம் ஒருபோதும் காட்டிக்கொடுக்க மாட்டோம் என்றார். (ற)

# நேரடி விவாதத்திற்கான மஹிந்தவின் பிரதிநிதியாக டலஸ் அழகப்பெரும

### ரணிலுக்கு மஹிந்த பதில் கடிதம்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஐக்கியத் தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுடனான விவாத ஏற்பாடுகளுக்காக தமது பிரதிநிதியாக டலஸ் அழகப் பெருமா நியமிக்கப்பட்டுள்ளதாக சுதந்திரக் கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இது தொடர்பாக ரணிலுக்கு அவர் கடிதமொன்றையும் அனுப்பியுள்ளார். இது தொடர்பில் மஹிந்த ரணிலுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், நவம்பர் 17ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலையொட்டிய பகிரங்க விவாதம் தொடர்பான தங்களின் நவம்பர் 7ஆம் திகதிய கடிதம் 8 ஆம்திகதிஎனது அலுவலகத்துக்கு கிடைத்தது.

இந்த விவாதத்துக்கு ஏற்பாடு செய்யும் பொருட்டு எனது சார்பில் டலஸ் அழகப் பொருமாவை நியமிக்க நான் விரும்புகின்றேன். இது தொடர்பாக அவர் தெரிவு செய்யப்பட்ட தங்களின் பிரதிநிதியோடு இணைந்து செயற்படுவார். அவரோடு 5628095 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்ள முடியும்.

தங்களின் பொறுப்புணர்வுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். அதேவேளை, இந்த நாட்டுக்கு நான் என்ன செய்துள்ளேன் என கேட்டிருக்கிறீர்கள். இதனை நான் ஆட்சேபிக்கின்றேன். நீங்களும் உங்களைச் சூழ்ந்து இருப்பவர்களும் தடுமாற்றமடைந்திருப்பதால் இது குறித்து நான் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எனினும் இந்நாட்டு மக்கள் நிச்சயமாக அப்படி தடுமாற்றமடைந்திருக்கவில்லை. நான் என்ன செய்திருக்கிறேன் என்பதற்கு மக்கள் அளிக்கும் பதிலே உணர்வுபூர்வமானதாகவும் காத்திரமானதாகவும் இருக்கும். இதுதான் எனக்குரிய விடயமும் ஆகும். எனதுபிரதிநிதி விவாதத்துக்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ள விதிகள் தொடர்பாக தங்களின் பிரதிநிதியுடன் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வருவார் என்று மஹிந்த பதிலளித்துள்ளார். (ற)

## திருட்டு

சூரசங்கார தினமான கடந்த 7ஆம் திகதி சித்தன்கேணி பெரியவளவுப் பிள்ளையார் கோவிலுக்குச் சென்ற இளைஞனின் பூட்டி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி இனந் தெரியாதவர்களால் திருடிச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (த-132,133)

# இன்று ஒரு தகவல்

## இன்சொல்

நாம் தினமும் பலரைச் சந்திக்கின்றோம்.பலவிடயங்களைக் கதைக்கிறோம். எம் கதைகளைக் கேட்போர் யாவரும் அகமகிழ்ந்து செல்கிறார்களா? இதற்கான பதில் உடன்பாடாக அமையுமானால் நீங்கள் இன்சொல் பேசுபவர் என்பதே அர்த்தம். எப்பொழுதும் ஒவ்வொரு மனிதனையும் இனிதாக மனம் குளிரவைப்பது இன்சொற்களேயாகும்.

இத்தகைய இன்சொற்களை பலர் தவிர்த்துக்கொள்கிறார்கள். இதனருமை அநேகருக்கு தெரியாமலுமிருக்கலாம். இதனால் இதன் சிறப்பை எல்லோருக்கும் தெரியப்படுத்தும் நோக்கமாக ஆன்மீகம் தொடர்பான கருத்தரங்கொன்றில் இன்சொல்லின் நன்மைகள் பற்றியும் ஆராயப்பட்டது. இக் கருத்தரங்கில் பலர் உரையாற்றினார்கள். அவர்களில் ஒருவர் கூறிய கருத்துக்களைப் பார்ப்போம்.

எமக்கு என்ன இடர் வந்தாலும் நாம் எப்பொழுதும் இன்சொல் பேசுவதைத் தவிர்க்கக் கூடாது. எம்மிடம் வருவோரை கண்டவுடன் முகமலர்ச்சியோடு நோக்கி அவரின் உள்ளம் பூரிக்க, புன்னகையுடன் பேசவேண்டும். இதுவே ஒவ்வொரு மனிதனுக்குமுரிய பண்பாடாகும். இன்சொல் பேசுவது பொன்னாலான அணிகலன்கள் அணிவதை விட அதிக அழகுடையது. இன்சொல் கேட்போருக்கு மட்டுமல்ல பேசுவோருக்கும் இன்பத்தையே கொடுக்கும். இதைவிட இன்சொல் பேசுபவர்களுடன் இருந்துகொண்டால் பசியே தெரிவதில்லை என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.இத்தகைய சக்திவாய்ந்த இன்சொல்லை அதிகமானோர் ஏன் பேசுவதில்லை? இதற்கு என்ன காரணமென்று ஆராய்ந்து பார்த்தால் இன்சொல்லின் வலிமையையும்,மகிமையையும் அறியாமையே என்ற உண்மைதான் தெரியவந்தது. சிலர் பிறர் இன்சொல் கதைக்கும்போது சந்தோஷமாகக் கேட்கிறார்கள். மறுகணம் அவர்களிடமே வன்சொல்லைப் பேசுகிறார்கள். இது ஏனென்று கேட்கிறீர்களா? அவரை அடக்கி தான் ஏதோ ஒரு விதத்தில் உயர்ந்தவர் என்பதைக் காட்டும் அற்பபுத்தி என்றே கருதலாம். இவர்களே வஞ்சனையுடையவர்கள். பிறரின் உள்ளத்தை சுட்டெரித்துப் புண்படுத்துபவர்கள். இவர்களுக்கு இப் பிறவிமட்டுமல்ல மறுபிறவியும் மகிழ்ச்சியாக அமையாதென்பது உண்மையானதே. இதுதவிர இன்சொல் பேசுவது மனமுவந்து ஒரு பொருளைக் கொடுப்பதிலும் பார்க்க மேலானது. இத்தகைய "இன்சொல்லைப் பேசத் தயங்குபவர்கள் கனிகளிருக்க காய்களைப் பிடுங்கும் அறிவில்லாதவர்கள் தான்'' என்று சொல்லி முடித்தார் அக் கருத்துரையாளர்.

இன்று நம் நாட்டிலே அதிகமான பெண்களும் ஆன்மீகத் துறையில் ஈடுபாடுடையவர்களுமே இன்சொல் பேசுபவர்களாகக் காணப்படுகிறார்கள். ஏனையோர் வன்சொற்களையும் கலந்தே பேசிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு இன்சொல்லின் சிறப்பு தெரியவில்லையென்றே சொல்லலாம். இதை உணர்த்தும் ஒரு கதையைப் பார்ப்போம்.

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார்.அவர் ஒரு சிந்தனையாளர். எப்போதும் எதைப் பற்றியாவது சிந்தித்து முடிவுகாண்பதே அவரின் இயல்பு. ஒருநாள் தனது மந்திரிமாரை அழைத்து நம்மூர் மக்களிலே மதிப்புக்குரியவர் யார்? என்று கேட்டார்.ஒவ்வொரு மந்திரியும் கல்விமான்கள்,கமக்காரர்கள்,செல்வந்தர்கள், வைத்தியர்கள்,இன்சொல்லாளர்கள் என்று பதில் கூறினர். இதைக் கேட்ட அரசன் "நீங்கள் சொன்ன பதில் முற்றிலும் சரியானதே என்பதை ஒரு மாத காலத்திற்குள் நிரூபித்துக் காட்டுபவருக்குப் பெறுமதியான பரிசொன்று வழங்கப்படும்'' என்றார்.

சரி, அரசே...! என்று ஒருமித்த குரலில் சொல்லியவர்கள் அவ்வேளையிலிருந்தே தம் செயற்பாடுகளை தொடங்கினர். ஒரு வாரத்தின்பின் ஒவ்வொருத்தராக தாம் சொன்ன பதிலுக்குரிய செயல்முறையை நிரூபிக்கத் தொடங்கினர்.இறுதியாக இன்சொல்லாளர்கள் என்ற பதிலைச் சொன்ன மந்திரி அவ்வூரிலிருந்த நற்குணமென்ற இன்சொல்லாளரை அழைத்துவந்து அரண்மனையில் உள்ள தனக்குரிய அறையில் தங்கவிட்டார். அடுத்த நாட் காலை நற்குணத்தை அரசன் சிறையில் வைத்துள்ளார் என்றொரு கதையைப் பரப்பிவிட்டான்.கொஞ்சநேரத்தின் பின் அரசமாளிகை முன் பெருந்தொகையானோர் கூடினர். ஆர்ப்பாட்டத்துடன் பொங்கியெழுந்தனர். எங்கள் நற்குணம் எங்கே? எங்கள் குணக்குன்று எங்கே? எங்கள் இனிய தோழன் எங்கே? எங்கள் இன்சொல்லாளனை விடுங்கோ... என்று கோஷமிட்டனர். இதைக் கண்ட மந்திரி ஓடோடிச் சென்று நற்குணத்தை அழைத்துக்கொண்டு போய் அரசன் முன்நிறுத்தி "அரசே...! இவர் ஒரு இன்சொல்லாளர். இவரின் நன்மதிப்பை அறியவேண்டுமாயின் அரண்மனை வாயிலில் வந்துபாருங்கள் என்றான். அரசனும் இக்காட்சியைப் பார்க்க விரும்பியவனாய் மந்திரி சகிதம் அரண்மனை வாயிலை அடைந்தான். அவர்களின் பின்னே நற்குணமும் சென்றான்.

அங்கே பெருந்தொகையான மக்கள் பொறுமையிழந்தவர்களாகக் கோஷங்கள் எழுப்பியவாறு கொதித்தெழுந்தனர். அப்போது மந்திரி அவர்களைப் பார்த்துச் சொன்னான். இன்சொல் பேசும் நற்குணத்தின் மதிப்பை அரசருக்குக் காட்டவே இப்படியொரு பரீட்சையை நடத்தினேன். இதோ பாருங்கள் நற்குணமும் நிற்கின்றார்.அவர் அரசருடன் சொற்பநேரம் கதைத்துவிட்டு வருவார் என்றான். அப்போது அங்குநின்ற மக்கள் உண்மை நிலையையறிந்தவர்களாய் அரசருக்கும் மந்திரிக்கும் நன்றி கூறிவிட்டு அகன்றனர். அரசனும் இன்சொல்லாளருக்கு இருக்கும் மதிப்பை உணர்ந்தவனாய் மந்திரிக்கும் இன்சொல்லாளன் நற்குணத்திற்கும் பரிசில் வழங்கிப் பாராட்டினான்.

இக்கதை இன்சொல்லாளர்கள் மக்களால் மதிக்கப்படுகிறார்கள் என்பதை உணர்த்துகின்றதல்லவா? இன்சொல் பேசுபவர்களை இறைவனும் விரும்புவதாக கருதப்படுவதால் மக்கள் மதிக்காமலா விடுவார்கள். இதனால் நாம் எல்லோரும் இன்சொல் பேசி பிறரை மகிழ்விப்பதுடன் மக்களின் மதிப்பையும் பெறுவதற்குத் தயங்க வேண்டியதில்லைத் தானே.

**எழுதுமட்டுவாளூர்**
**எஸ்.எஸ்.காசிப்பிள்ளை**

# எனது ஆட்சிக் காலத்தில் எந்தவொரு இனத்திற்கும் அநீதி இழைக்கப்படவில்லை

## -ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

தமது ஆட்சிக் காலத்தில் அனைத்து இன மக்களும் இலங்கையர்களாக, நல்லுறவோடும் பெருமையோடும் வாழக்கூடிய தேசத்தை உருவாக்குவதற்கான அடித்தளத்தை இடமுடிந்ததாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தாம் அனைத்துத் தருணங்களிலும் தெளிவான -நிலைத்திருக்கக் கூடிய கொள்கைகளின் அடிப்படையில் நாட்டை நிர்வகித்ததாகவும், எந்தச் சமூகத்திலும் அவற்றை விட்டுக்கொடுக்கவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் 10ஆண்டுகால அரசியல் தலைமைத்துவத்தின் சிறப்புக்களை எடுத்துரைக்கும் 'இலங்கையின் விவேகமுள்ள தலைமைத்துவம்' என்ற படத்தை வெளியிடுவதற்காக நேற்றுமுன்தினம் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் படத்தை பேராசிரியர்களான ஏ.வி.சுரவீர, விஸ்வவர்ணபால ஆகியோர் உருவாக்கியிருந்தார்கள். இந் நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வறுமை,அராஜகம் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டிருந்த நாட்டில் மனிதாபிமானத்தை பரவச் செய்ய எம்மால் முடிந்தது.

எனது பெற்றோரிடமிருந்து கற்றறிந்த விடயங்களும், பௌத்த கோட்பாடுகளும் இதற்கு உறுதுணையாக அமைந்தது.

நான் மனிதாபிமானத்தில் நம்பிக்கை வைத்து நிர்வாகத்தை முன்னெடுத்துச் சென்றதால் எந்தவொரு இனத்திற்கும் அநீதி ஏற்பட இடமளிக்கவில்லையெனவும் குறிப்பிட்டார். மேலும் அடுத்துவரும் தலைவருக்கு நாட்டின் எதிர்காலத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல ஆசி வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார். (ந-9)

# இனத்துவேசத்தைக் கக்கும் ஜே.வி.பியினர் இதுவரை ஆயுதங்களை கையளித்தனரா?

## -ஆறுமுகன் தொண்டமான் விசனம்



(கொழும்பு)

நம் நாட்டுக்கு பெருமளவு பொருளாதாரத்தை ஈட்டித்தந்த தேயிலைத் தொழிற்சாலைகளை எரித்து இரவோடு இரவாக அப்பாவித் தொழிலாளர்களின் தேசிய அடையாள அட்டையைப் பறித்து தொழிற்சங்கத் தலைவர்களை படுகொலை செய்த ஜே.வி.பி இன்று விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டுமென்று கூறிவருவதோடு இனத்துவேசத்தையும் கக்கிவருவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கண்டி டி.எஸ்.சேனநாயக்கா மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியினர் கொலைகளுக்கும்,கொள்ளைகளுக்கும் பயன்படுத்திய ஆயுதங்களை இதுவரை கையளித்தனரா? நாட்டின் நிரந்தர சமாதானத்தையும்,சுபீட்சத்தையும் ஏற்படுத்தும் தகுதியைக் கொண்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாம் வாக்களித்து வெற்றிபெறச் செய்யவேண்டு மென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-8)

# ரணில்-மஹிந்த நேரடி விவாதத்தை ஒளிபரப்ப ரூபவாஹினி விருப்பம்

## அனுமதி கோரி சம்பந்தப்பட்டோருக்குக் கடிதம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான கட்சி வேட்பாளர்கள் ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரது விவாதத்தை நேரடியாக ஒளிபரப்புச் செய்ய அரச தொலைக் காட்சியான ரூபவாஹினி விருப்பம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலையொட்டி பிரதான பிரச்சினைகள் தொடர்பாக விவாதிக்க இருவரும் ஒப்புக்கொண்ட நிலையில் இவர்களது நேரடி விவாதத்தை நேரடி ஒளிபரப்புச்செய்ய ரூபவாஹினியும் முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பில் இரு வேட்பாளர்களுக்கும் ரூபவாஹினியின் தலைவர் என்.எம்.சுஹைர் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் கீழ் இந்த ஒளிபரப்பை ரூபவாஹினி மேற்கொள்வதாகவும் நவம்பர் 14அல்லது அதற்கு முன்னதாக எந்த நேரத்திலும் இந்த விவாதத்தை நேரடி ஒளிபரப்புச் செய்யத் தயாராக உள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் திணைக்கள ஆணையாளருக்கும் இந்த விவாதத்தை நேரடி ஒளிபரப்புச் செய்தது தொடர்பில் தாம் தெரிவித்துள்ளதாகவும் நேரடி ஒளிபரப்புத் தொடர்பாக ரூபவாஹினியிடம் மஹிந்த ராஜபக்ஷ விவாதித்ததாகவும் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந)

# ரணிலின் கணனி கொள்வனவு மோசடி தொடர்பாக சட்ட நடவடிக்கை

## -மங்கள சமரவீர

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க மீதான கணனிக் கொள்வனவு மோசடி தொடர்பாக சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.இதுதொடர்பாக மங்கள சமரவீர குறிப் பிடுகையில்,

ரணில் மீதான கணனிக் கொள்வனவு மோசடி குறித்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் கடந்த ஒக்ரோபர் 12ஆம்திகதி முறைப்பாடு செய்தோம். ஒரு மாதத்திற்குப் பின்னர் விசாரணைகளுக்கு எமது முறைப்பாடு ஏற்றதல்ல என்று ஆணைக்குழு கூறியுள்ளது. பலகோடி ரூபாய் கணனி கொள்வனவு மோசடி தொடர்பான ஆவணங்களை முறைப்பாடு செய்த எம்மிடமிருந்து பெறாமலேயே ஆணைக்குழு எப்படி இம்முடிவை மேற்கொண்டது? இந்த மோசடி தொடர்பில் நாம் சட்டபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளோம் என்றார். (ந)



கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் அதிபர் க. செல்வகுமாரன் அறிக்கையை சமர்ப்பிப்பதையும், வாழ்த்துரை வழங்கிய செ.குபேரநாதனும் நினைவுப்பேருரை வழங்கிய கலாபூஷணம் சு.துரைசிங்கமும் அருகில் இருப்பதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சிவாஜிலிங்கம் எம்.பி உரைநிகழ்த்துவதையும் சபையில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்பதன் மூலம் தமிழ்த் தேசிய எழுச்சியை வெளிப்படுத்துவோம்!

## கோப்பாய் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களின் ஜனாதிபதித் தேர்தலை நிராகரிக்குமாறு கோப்பாய் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இது விடயம் தொடர்பில் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழர் தாயகப் பிரதேசமாகிய வடக்கு கிழக்கில் மக்கள் செறிவாக வாழும் பகுதிகள், பொது நிறுவனங்கள், வீதிகள் என்பவற்றில் இராணுவத்தினரும் பொலிஸாரும் தமது முகாம்களை அமைத்து மக்களை சுதந்திரமாக நடமாடவிடாதும், அச்சுறுத்தியும், பெண்கள் மீதான வன்முறைகள், அடாவடித்தனங்கள் என்பவற்றை அரங்கேற்றி வருகின்றனர்.

தமிழ் மக்கள் தமது விடுதலைப் போராட்டத்தின் பால் ஒன்றுபடுவதைத் தடுக்கும் நோக்கில் திட்டமிட்டு எமது பாரம்பரிய கலாசாரத்தை சீரழிக்கும் முகமாக தமிழ் மக்கள் தமது நயவஞ்சக வலையில் விழவைத்து விடலாம் என்ற நப்பாசையில் சிறிலங்கா இராணுவமும் பொலிஸாரும் அவர்களுடன் இணைந்து தாய் நாட்டை சிங்களப் பேரினவாதிகளிடம் தாரைவார்க்க ஒப்பந்தம் செய்துள்ள தேசவிரோத கும்பல்களும் மூர்க்கமாக செயற்பட்டு வருகின்றன.

இதற்கு உதாரணமாக எமது தாயக மண், சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட போது எமது கலை, கலாசார விழுமியங்களை இழந்தது மட்டுமன்றி ஏராளமான அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களும் காவு கொள்ளப்பட்டன.

சொத்துக்களையும் இழந்து நிர்க்கதியான மக்கள் தமது படைக்கட்டுமானங்களைப் பலப்படுத்தி தேச விடுதலைப் போராளிகளோடு துணை நின்று வியத்தகு தாக்குதல்களை நடாத்தி சிங்கள ஆட்சியாளர்களை மட்டுமன்றி சர்வதேசத்தையே திகைப்பில் ஆழ்த்தினர். அதன் விளைவு தான் போர் தவிர்ப்பு ஒப்பந்தமாகும். இவ் ஒப்பந்தம் மூன்றரை ஆண்டுகளுக்கு எதனை எமக்குத் தந்து குவித்தன?

நிராயுதபாணிகளான அரசியல் போராளிகளை இழந்தோம். நாட்டுப்பற்றாளர்களை இழந்தோம். அது மட்டுமன்றி எமது மக்கள் நலன்புரி முகாங்களில் பல சிரமங்களுக்கு மத்தியில் வாழும் நிலை நீடிக்கப்பட்டது. படிப்படியாக வெளியேறவேண்டிய இராணுவம் தமது நிலைகளை மேலும் பலப்படுத்தியது மட்டுமல்லாமல் எமது மக்களின் அன்றாட வாழ்விலும் குந்தகம் விளைவித்தது.


சிறிலங்காவின் கடந்தகால ஆட்சியாளர்கள் இதனையே எமது மக்களிற்குப் பரிசாகத் தந்தனர். இதனை தமிழ்மக்கள் நன்கு உணரவேண்டும்.

சிங்கள அரசியல்வாதிகள் எம்மை நம்பவைத்துநாணையம்பூட்டி சவாரி செய்ய நினைக்கின்றார்கள். எந்த ஒரு சிங்களப் பேரினவாத அரசாங்கமும் எமது மக்களுக்கு எமது தேசத்தின் சுதந்திரத்தைப் பெற்றுத் தரப்போவதில்லை என்பதை மக்கள் உணரவேண்டும். இவ்வளவு காலமும் நாம் படித்த பாடம் நினைவில்லையா? தேர்தலை பகிஷ்கரிப்பதன் மூலம் எமது தமிழ்த்தேசிய எழுச்சியை எதிரிக்கு எடுத்துக்காட்டுவோம்.

தமிழ்மக்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல. மானம்மிக்க வீரமிக்க– ஓர் தேசிய இனம் என்று இதுபோன்ற எதிரிகளினதும் விரோதிகளினதும் கபடத்தனத்திற்கு நாம் ஒன்றுபட்டு பதிலடி கொடுப்போம். அத்தோடு எத்தடை வரினும் அதனை முறியடித்து எம் மாணம் காத்த மாசற்ற மாவீரர்களின் புனிதநாளை நினைவு கூர நாம் அனைவரும் உணர்வெழுச்சியுடன் திரள வேண்டுகை விடுக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# நாட்டின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் வழங்கக்கூடிய தலைவர் மஹிந்தவே

## -சோமவன்ஸ அமரசிங்க



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்க முடியாதவர்கள் தேர்தலில் வாக்களிப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டுமென ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை தம்புள்ளவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜே.வி.பி தலைவர் சோமவன்ஸ அமரசிங்க இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மஹிந்தவின் சிந்தனையுடன் இணங்கிச் செல்ல முடியாதவர்கள் வாக்களிப்பதைத் தவிர்த்துக்கொள்வது சிறந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்தவுக்கு வாக்களிக்க முடியாதவர்கள் வாக்குச் சாவடிகளுக்குச் செல்லவேண்டாம். மஹிந்த ராஜபக்ஷவே நாட்டின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கக்கூடியவர். திருகோணமலையில் தேசியக் கொடியை ஏற்றியது தமது நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயந்த விஜயசேகர என்று குறிப்பிட்ட அவர், மஹிந்த ராஜபக்ஷவும் அவர்களுடன் சேர்ந்து இயங்கும் படைகளுமே இலங்கையின் அனைத்துப் பகுதியிலும் தேசியக் கொடியை ஏற்றுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-9)

# கட்டாயக் கல்விக் குழுவை வலுப்படுத்தும் திட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் கட்டாயக் கல்வி வயதில் உள்ள (5–14) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் உள்ளனர்.

இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு பாடசாலைகளது மாணவர் வரவை மேம்படுத்தும் குழுக்களை வலுப்படுத்துவதற்கு செயலமர்வு ஒன்றினை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, கைதடி, மட்டுவில் ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளினது கட்டாயக் கல்விக் குழுவில் அங்கம் வகிக்கும் பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோரை இதில் பங்குபற்றுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் கேட்டுள்ளார்.

இச் செயலமர்வு எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு சாவ கச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-108)

# அலர்ஜியை குணப்படுத்த அரிசியில் இருந்து மருந்து



மனிதர்களில் நான்கில் ஒருவர் அலர்ஜியால் பாதிக்கப்படுவதாக ஆய்விலிருந்து தெரியவருகிறது.

உணவில் தொடங்கி மூச்சு மண்டலம் வரை அலர்ஜியின் பாதிப்புகள் வேறுபடும். இதில் பெரும்பாலானவற்றை சுற்றுச்சூழலை மாற்றுவதன் மூலமாகவும் அல்லது மருந்துகளை எடுத்துக்கொள்வதன் மூலமாகவும் கட்டுப்படுத்திவிட முடியும்.

ஆனால் தூசியினால் ஏற்படும் சளிக் காய்ச்சல் வகை மற்றும் பூனைக்காய்ச்சலால் அவதிப்படுபவர்களுக்கு அலர்ஜி மருந்து ஊசிகள் தேவைப்படுகிறது.

இந்நிலையில், வழக்கமான ஊசி மருந்துகளுக்குப் பதில் தாவரங்களில் இருந்து தயாரிக்கப்படும் அலர்ஜி மருந்துகளால் கூடுதலான பலன்கள் இருப்பதாக நிபுணர்கள் கூறிவந்தனர்.

இதை நிரூபிப்பது போல டோக்கியோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் தகாஜி, அரிசியில் இருந்து புதிய அலர்ஜி மருந்தைக் கண்டுபிடித்துள்ளார். வாய் வழியாக தரப்படும் இந்த மருந்து, அரிசியின் மரபு பண்புகளை மாற்றி உருவாக்கப்பட்டது. இத்தகைய மருந்தை எலிகளுக்குக் கொடுத்து சோதனை செய்தபோது, அலர்ஜி ஆபத்து கணிசமாக குறைந்தது.

எனினும், மனிதர்களுக்கு இந்த மருந்தை இனிமேல்தான் சோதனை செய்ய வேண்டும். (ற)

# கிடுகு வழங்க ஏற்பாடு

சேவாலங்கா நிறுவனம் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் தற்காலிக கொட்டகைகளுக்காக கிடுகுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேற்படி திட்டத்திற்காக கிராம சேவகர் பிரிவு ரீதியாக விபரம் திரட்டப்பட்டுள்ளது. (து)

# போயா ஆன்மீக நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் அதிகாலை 5 மணிக்கு நகரசங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும். (து)

# கட்டடத் திறப்பு விழா

வட்டக்கச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயத்திற்கு புதிய கட்டடத்தைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தளபதி சசிக்குமார் திறந்து வைத்தார். இந்நிகழ்விற்கு மேற்படி பாடசாலை அதிபர் இரத்தினகுமார் தலைமை தாங்கினார்.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து தேசியத் கொடியினை பிரதேச அரசியற் துறைப் பொறுப்பாளர் சுடர் ஏற்றிவைத்தார். 3 மாடிக் கட்டடத்தை வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா திறந்து வைத்தார்.

விஞ்ஞான ஆய்வுகூடத்தினை கிளி. மாவட்ட கல்விக்கழக பொறுப்பாளர் சி.அறிவன்பனும், செயற்பாட்டு அறையினை ஆங்கில பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் கி.தனராஜாவும், அழகியற்பாட மண்டபத்தினை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி த.தட்சணாமூர்த்தியும், பொதுமண்டபத்தினை பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.சின்னராசாவும் திறந்து வைத்தனர். (து)

# கேவில் வயல் கிராமம் தெரிவு

புச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழான கேவில் வயல் கிராமம் நெக்டொப் திட்டத்தின் கீழான அபிவிருத்தித் திட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (து)

# நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதே எனது நோக்கம்

## - ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

இனவாத அரசியலை ஒழித்துக் கட்டி நாட்டை ஐக்கியப்படுத்துவதன் ஊடாக நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவது தமது நோக்கமென எதிர்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சி அரசியலும் இனவாதமும் நாட்டின் அரசியலை மாத்திரமின்றி இளைய தலைமுறையின் எதிர்காலத்தையும் பாதாளத்தில் தள்ளுவதாக அமையும் என அவர் தெரிவித்தார். நேற்று முன்தினம் குருநாகலில் இடம்பெற்ற பிரசாரக்கூட்டத்தில்கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அமரர் ஜே.ஆர்.ஜெயவர்தன, அமரர் ரணசிங்க, பிறேமதாஸ ஆகியோர் நடைமுறைப்படுத்திய இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளின் அனுபவங்களைக் கொண்டு தாம் ஆரம்பித்த சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப் போவதாகவும் தெரிவித்தார். (த-9)

# செத்து மிதக்கும் மீன்கள்! ஆய்வுகள் ஆரம்பம்

(திருகோணமலை)

திருகோணமலை உட்துறைமுக வீதி கடற்கரைப் பகுதியில் இறந்து கரையொதுங்கும் மீன்கள் தொடர்பில் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நாரா நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட பகுதியின் நீர் மாதிரிகளையும், மீன்களின் மாதிரிகளையும் கொழும்புக்கு கொண்டுசென்று பரிசோதனைகளை ஆரம்பித்திருப்பதாக நாரா நிறுவனத்தின் தலைவர் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாகக் கரையொதுங்கிய மீன்களை அகற்றும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு அகற்றப்படும் மீன்கள் கிண்ணியாப் பகுதியில் புதைக்கப்படுகின்றன. (ற-8)

# மங்கள சமரவீரவுக்கு எதிராக இ.ஊ.ஆ.குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் ரூபவாகினி கூட்டுத்தபான முகாமைத் துவத்திற்கும் எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் மங்கள சமரவீர முற்பணக் கட்டணத்தை மட்டுமே செலுத்தி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரின் பிரசார விளம்பரத்தை ஒளிபரப்புமாறு ரூபவாகினி கூட்டுத்துபான பணிப்பாளருக்கு உத்தவிட்டுள்ளமைக்கு எதிராகவே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ரூபவாகினியின் கட்டுப்பாட்டு அதிகாரியும், முழுக்கட்டணத்தையும் அறவிடாமல் குறித்த தேர்தல் பிரசார விளம்பரத்தை ஒளிபரப்பியிருப்பதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-8)

# இலங்கை- இந்தியா இன்று 7வது போட்டி

### இலங்கை

**அத்துப்பத்து (கப்டன்), ஜெயவர்த்தன, ஜெயசூர்யா, தில்சான், அர்னால்டு, சங்ககார, சமரவீரத தரங்க, சந்தன, முரளிதரன், வாஸ், பெர்னாண்டோ, மகரூப், சொய்சா.**

### இந்தியா

**டிராவிட் (கப்டன்), சேவாக், டெண்டுல்கர், டோனி, யுவராஜ்சிங், பதான், கயூப், ரெய்னா, காம்பீர், ஹர்பஜன்சிங், முரளிகார்த்திக், அகர்கர், ஸ்ரீசந்த், ஆர்.பி.சிங்.**




மாவன் அத்தப்பத்து தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையே 7 ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் இந்தியா 5 ஆட்டங்களில் வெற்றி பெற்றது. ஒரு ஆட்டத்தில் இலங்கை வெற்றி பெற்றது.

இந்நிலையில், இரு அணிகள் மோதும் கடைசி மற்றும் 7ஆவது ஒருநாள் போட்டி இன்று வதோதராவில் நடைபெறவுள்ளது. இதற்காக இரு அணி வீரர்களும் நேற்று முன்தினமே அங்கு சென்றடைந்தனர். நேற்று அவர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.



டிராவிட்

ராஜ்கோட்டில் நடைபெற்ற 6ஆவது போட்டியில் கப்டன் டிராவிட்டுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டிருந்தது. இந்த ஆட்டத்தில் சேவாக் கப்டனாக செயல்பட்டார். இன்றைய கடைசி ஆட்டத்தில் டிராவிட் களம் இறங்குகிறார்.



துடுப்பாட்டத்தில் கடந்த சில ஆட்டங்களில் சரியாக ஆடாத யுவராஜ் சிங் ராஜ்கோட் போட்டியில் சிறப்பாக ஆடி பழைய நிலைக்குத் திரும்பியுள்ளார். மேலும் இந்தத் தொடரில் சேவாக் பிரமாதமாக ஒன்றும் ரன் குவிக்கவில்லை. இதனால் அவர் அதிகவேக ஆட்டத்தில் ஈடுபட்டு ரன் குவிப்பார்.

### இளம் வீரர்கள்



சப்பலின் பரிசோதனை முறைக்கு நல்ல பலன் கிடைத்து வருகிறது. அவரால் இளம் வீரர்களின் திறமை இந்தத் தொடரில் அதிகம் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. அவர் இளம் பந்துவீச்சாளர்களான ருத்ர பிரதாப் சிங், ஸ்ரீசந்த் ஆகியோரை ஊக்கப்படுத்தி வருகிறார்.

இளம் வீரர்களும் தங்களுக்கு கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தி வருகின்றனர்.



குறிப்பாக ஆர்.பி.சிங் கடந்த ஆட்டத்தில் நேர்த்தியாக பந்துவீசி 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றி இலங்கை அணியை நிலைகுலையச் செய்தார். இளம் இரத்தங்கள் துடிப்புடன் உள்ளதால் இன்றைய கடைசி ஆட்டத்திலும் அவர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்கப்படும்.

### இலங்கை



இலங்கை அணியைப் பொறுத்தவரையில் தொடரை ஏற்கனவே இழந்து விட்டது. இத்தொடரில் இலங்கை அணியில் உள்ள முன்னணி துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டம் மிகவும் மோசமாக உள்ளது. இதனால் இலங்கை அணி விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக இலங்கை அணி சிறப்பாக ஆட வேண்டிய நிலையில் உள்ளது. இதனால் ஆட்டத்தில் விறுவிறுப்பு அதிகம் காணப்படும்.

### மைதானம்




இன்று கடைசிப் போட்டி நடைபெறும் வதோதரா ஐ.பி.சி.எல். மைதானம் துடுப்பாட்டத்திற்கு சாதகமான இடம். இங்கு 1996ஆம் ஆண்டு நெதர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் நியூசிலாந்து 307 ரன்கள் குவித்தது. இதுதான் இந்த மைதானத்தின் அதிகபட்ச ஸ்கோர் ஆகும்.

இந்தியா 2002 ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிரான போட்டியில் 290ரன் குவித்துள்ளது. இதுவே இந்தியா வதோதரா மைதானத்தில் குவித்த அதிக ரன் ஆகும்.



இந்திய- இலங்கை அணிகள் இடையேயான இன்றைய ஆட்டம்காலை 9 மணிக்கு நடக்கிறது.

போட்டியை தூர்தர்சன் நேரடி ஒளிபரப்பு செய்கிறது. (ற)




*இங்கிலாந்து தொடருக்கான பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் வேகப் புயல் சோயப் அக்தர் சேர்க்கப்பட்டுள்ளார். இவருக்கும் இன்சமாமுக்கும் சுத்தமாக ஆகவே ஆகாது.*

*அதற்காக என்ன செய்ய முடியும்? முக்கியத்துவமான தொடருக்காக நேற்று முன்தினம் இருவரும் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டிருந்தனர்.*



*முல்தானில் இங்கிலாந்து – பாகிஸ்தான் அணிகளுக்கிடையே முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் இன்று தொடங்கவுள்ளது. வலது முழங்காலில் ஏற்பட்ட காயத்தால் இந்தப் போட்டியில் இங்கிலாந்து கப்டன் மைக்கேல் வான் பங்கேற்பது என்பது சந்தேகமே. இதனால் நேற்று பெவிலியனில் சோகமாக அமர்ந்து கொண்டு சக வீரர்களின் பயிற்சியை பார்வையிடுகிறார்.*

## டெஸ்டிலும் கலக்க வருகிறார் சைமண்ட்ஸ்



ஒருநாள் போட்டி 'ஸ்பெஷலிஸ்ட்' அவுஸ்திரேலியாவின் ஆன்ட்ரூ சைமண்ட்ஸ் டெஸ்டிலும் கலக்க வருகிறார். மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான இரண்டாவது போட்டியில் களமிறங்குகிறார்.

. அவுஸ்திரேலியா சென்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. முதல் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று 1-0 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றுள்ளது.

இரண்டாவது போட்டி எதிர்வரும்17ஆம் திகதி ஹோபார்ட் நகரில் நடக்கவுள்ளது. இதற்கான 12பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணியில் 'ஆல்-ரவுண்டர்' ஆன்ட்ரூ சைமண்ட்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார். காயம் ஏற்பட்டுள்ள ஷேன் வாட்சனுக்கு பதிலாக இவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதற்கு முன்னதாக கடந்த ஆண்டு நடந்த இலங்கைக்கு எதிரான இரண்டு டெஸ்டில் சைமண்ட்ஸ் விளையாடியுள்ளார்.

சமீபத்தில் அடிலெய்டில் நடந்த முதல் தர போட்டியில் குயின்ஸ்லாந்து அணிக்காக விளையாடிய இவர் சவுத் அவுஸ்திரேலியா அணிக்கு எதிராக 183 பந்தில் 163 ரன் குவித்தார். இதன் காரணமாக சைமண்ட்ஸ் சேர்க்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய தேர்வுக்குழு தலைவர் டிரிவோர் ஹான்ஸ் கூறியுள்ளார். இவர் அளித்த பேட்டியில்,

சைமண்ட்ஸ் சிறப்பான நிலையில் இருக்கிறார். பேட்டிங் அல்லாமல் பந்துவீச்சிலும் இவரைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதால் இவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்றார்.

மோசமான நிலையில் இருக்கும் சைமன் கேடிச் பதிலாக பிராட் ஹாட்ஜ் மாற்றப்பட்டுள்ளார். (ற)




## முல்தான் டெஸ்டில் வானுக்கு பதிலாக குக்

இன்று ஆரம்பமாகவுள்ள பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து கப்டன் மைக்கேல் வான் விளையாட மாட்டார் எனத் தெரியவருகிறது. இதனால் அறிமுக வீரர் அலஸ்டைர் குக் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் சென்றுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் முல்தானில் இன்று தொடங்குகிறது. இதில் இங்கிலாந்து கப்டன் மைக்கேல் வான் விளையாட மாட்டார் எனத் தெரிகிறது.

பயிற்சிப் போட்டியின்போது ஏற்பட்ட கணுக்கால் காயத்திலிருந்து வான் இன்னும் முழுமையாக குணமடையவில்லை. இதனால் முன்னெச்சரிக்கையாக தொடக்க ஆட்டக்காரரான அலஸ்டைர் குக்கை அணியில் சேர்த்துள்ளது இங்கிலாந்து கிரிக்கெட் சபை.

குக் முதல்தர போட்டிகளில் சிறப்பாக விளையாடியுள்ளார். இந்த ஆண்டில் கவுன்டி சாம்பியன்ஷிப் தொடரில் 4 சதம் அடித்துள்ள இவரது சராசரி 48.03. முல்தான் டெஸ்டில் இவர் விளையாடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. தொடர்ந்து சிகிச்சை பெற்றுவரும் வான் இரண்டாவது போட்டியில் கட்டாயம் விளையாடுவார் என இங்கிலாந்து மருத்துவ குழு கூறியுள்ளது. (ற)

## விளையாட்டு செய்திகள்

## டேவன்போர்ட் - மேரிபியர்ஸ் வெற்றி

உலகின் முன்னணி டெனிஸ் வீராங்கனைகள் பங்கேற்றுள்ள 'ரவுண்ட் ராபின் லீக்' சர்வதேச பெண்கள் டெனிஸ் போட்டி அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்து வருகிறது.

முன்னணி வீராங்கனைகளான லிண்ட்சே டேவன் போர்ட், மேரி பியர்ஸ், மரியா ஷரபோவா, கிம் கிலிஸ்டர்ஸ் உட்பட 8பேர் பங்கேற்றுள்ள இந்தப் போட்டியின் 2ஆவது நாள் ஆட்டத்தில் முதல் நிலை வீராங்கனையான லிண்ட்சே டேவன்போர்ட் (அமெரிக்கா), சுவிட்சர்லாந்தைச் சேர்ந்தவரும், 8ஆம் நிலை வீராங்கனையுமான பத்தி ஷின்டெரை எதிர்த்து ஆடினார். பரபரப்பாக நடந்த இந்தப் ஆட்டத்தில் டேவன்போர்ட் 6-3, 7-5 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்றார். இந்தப் போட்டியில் அவர் பெற்ற 2ஆவது வெற்றி இதுவாகும்.

மற்றொரு ஆட்டத்தில் 2ஆம் நிலை வீராங்கனை மேரி பியர்ஸ் (பிரான்ஸ்), ரஷ்ய வீராங்கனை எலீனா டெமன்டியேவாவுடன் மோதினார். ஆட்டத்தின் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி ஆடிய மேரி பியர்ஸ் இதில் 6-2,6-3 என்ற கணக்கில் எளிதாக வெற்றி பெற்றார். மேரி பியர்ஸ் முதல் ஆட்டத்தில் கிம்கிலிஸ்டர்சை தோற்கடித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஒரு ஆட்டத்தில் பிரான்ஸ் வீராங்கனை அமெலி மவுரெஸ்மோ, பெல்ஜியம் வீராங்கனை கிம் கிலிஸ்டர்சை எதிர்கொண்டு ஆடினார். இந்த ஆட்டத்தில் மவுரெஸ்மோ 6-3, 7-6 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். (ற)

# அவசரகாலநிலை அமுலில் உள்ளபோதும் பாரிஸில் கலவரங்கள் நீடிக்கின்றன

(பாரிஸ்)

பிரான்ஸில் அவசரகாலநிலை அமுல் படுத்தப்பட்டுள்ள போதிலும் அங்கு பிரான்



ஸில் குடியேறி இருக்கும் ஆபிரிக்கர்கள் கலவரததில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆயிரக்கணக்கான கார்களும் பல கட்டடங்களும் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. இதனையடுத்து கலவரத்தை ஒடுக்க ஜனாதிபதி சிராக அவசரகால நிலையை பிரகடனம் செய்தார். தலைநகர் பாரிஸ் உட்பட 38 நகரங்களில் நெருக்கடி நிலை அமுல்படுத்தப்பட்டது.

இருந்த போதிலும் கலவரம் முழுமையாக அடங்கவில்லை. 15ஆவது நாளான நேற்றும் சில இடங்களில் தீ வைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன. நேற்று மட்டும் 280 கார்கள் எரிக்கப்பட்டன. இச்சம்பவத்தையடுத்து 143பேரை பொலிஸார் கைதுசெய்தனர்.

அவசரகால பிரகடனத்துககுப பிறகு




நிலைமை ஓரளவு சீரடைந்து இருப்பதாக பொலிஸ் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் கூறுகையில்,

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில்



1,400 கார்கள் எரிக்கப்பட்டன. அதோடு ஒப்பிடும்போது தற்பொழுது வன்முறை சம்பவங்கள் குறைந்துவிட்டன. நேற்றைய தினம் யாரும் காயமடையவில்லை' என்று தெரிவித்தார். (ற)




ஜேர்மனியில் ப்ரான்ங்பர்ட் நகரில் அறிமுகப்படுததப்பட்ட புதிய விமானத்தின் மாதிரிவடிவம்

# ஜோர்டான் குண்டுத் தாக்குதலுக்கு அல்-கெய்டா பொறுப்பேற்பு

(கெய்ரோ)

ஜோர்டான் நாட்டு தலைநகர் அம்மானில் நடைபெற்ற குண்டுவெடிப்புக்கு ஒசாமா பின்லேடனின் அல்-கெய்டா இயக்கம் பொறுப்பேற்றுள்ளது.

ஜோர்டான் தலைநகர் அம்மானில் நேற்று முன்தினம் 3ஹோட்டல்களில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தன. இதில் 57பேர் பலியானார்கள்.

இக் குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கு ஒசாமா பின்லேடனின் அல்-கெய்டா இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. ஈராக்கில் இருந்து செயல்படும் இந்த அல்-கெய்டா கிளை இயக்கத்தின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் இந்த தகவல வெளியாகியுள்ளது.

இஸ்லாமிய இணையத்தளம் ஒன்றில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கத்தேய நாடுகளின் ஆதிக்கத்திற்கு எதிராக தங்களது இயக்கம் அம்மான் என்ற நகரில் 3 தற்கொலைப் படைத் தாக்குதல களை நடத்தியதாகவும், இதுபோன்ற தாக குதல்கள் தொடரும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ற)

WORLD NEWS
உலக தரிசனம்

# 'சார்க்' மாநாடு இன்று ஆரம்பம்

## பாதுகாப்புப் பணியில் 40,000 பொலிஸார்

(டாக்கா)

சார்க் உச்சி மாநாடு இன்று பாகிஸ்தான் தலைநக[illegible] டாக்காவில் தொடங்கவுளளது. [illegible] கலந்துகொள்ளும் 7 நாட்டுத் தலை[illegible]ர்களின் பாதுகாப்புக்கு 40 ஆயிரம் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனா.

தெற்கா[illegible]ய நாடுகள் (சார்க்) கூட்டமைபபின் 13[illegible]வது மாநாடு பங்களாதேஷ் த[illegible]க்காவில் இன்று தொடங்கவுளளது. [illegible]மாநாடு 2 நாள் நடைபெறும். இதில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங, பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஜிஸ, நேபாள மன்னர் ஞானேந்திரா, இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பூட்டான பிரதமர் நெதுப், மாலைதீவு அதிபர் கயூம், பங்களாதேஷ பிரதமர் கலிதா ஜியா ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

தீவிரவாதத்தை ஒடுக்க கூட்டாகச் செயல்படுவது, அமைதியை நிலைநாட்டுவதில ஒருங்கிணைந்து பணியாற்றுவது, சார்க் நாடுகள் இடையே பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவது பற்றி இந்த மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

முதலீட்டுக்குப் பாதுகாப்பு அளித்தல், இரட்டை வரி விதிப்பை நீக்குதல், சுங்க வரி விதிப்பில் ஒத்துழைப்பு ஆகிய 3 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வறுமையை ஒழிக்க சார்க் வளர்ச்சி நிதியம அமைப்பது பற்றிய அறிவிப்பும் வெளியிடப்படவுள்ளது.

7 நாட்டுத் தலைவர்களும் டாக்காவில உள்ள 5 நாட்சத்திர ஷெரட்டன் ஹோட்டலில் தங்கியுள்ளனர். அந்த ஹோட்ட லுககு வெளியாட்கள் செல்லத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் பணியில் பொலிஸார் பாதுகாப்புப் படையினர் என சுமார் 40 ஆயிரம் பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ற)

# தீவிரவாத திருத்தச்சட்டமூலம் தோல்வி பிளேயர் கடும் அதிர்ச்சி; பதவி விலகுவாரா?

(இலண்டன்)

தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப் படுவோரை 90 நாட்கள் வரை காவலில்



வைத்து விசாரிக்கும் புதிய திருத்தச் சட்ட மூலத்தை பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் அந்நாட்டு பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம கொண்டு வந்தார். இப் படு தோல்வியை தழுவியதால் பிரதமர் ரொனி பிளேயர் பெரும் அதிர்ச்சிஅடைந்துள்ளார்.

கடந்த 1997ஆம் ஆண்டு பிரிட்டன் பிரதமராக ரொனி பிளேயர் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து அவர் மூன்று முறை பிர்தமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரதமர் ரொனி பிளேயர் தீவிரவாதத்திற்கு எதிராக அமெரிக்கா தொடங்கிய போரில் அந்நாட்டுக்கு ஆதரவு தெரிவித்தார். சமீபத்தில் பிரிட்டனில் நடந்த தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் அந்நாட்டு மக்களை பெரும் பீதியில் ஆழ்த்தின.

இந்நிலையில் தீவிரவாதி என சந்தேகிக்கப்படுவோரை 90 நாட்கள்வரை பொலிஸ காவலில் வைத்து விசாரிக்க வழிவகை செய்யும் திருத்தச்சட்டமூலம ஒன்றை ரொனி பிளேயர் பிரிட்டன் பாராளுமன்றில் நேற்று முன்தினம் கொண்டுவந்தார். அந்த சட்ட மூலம் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த திருத்தச்சட்டமூலத்திற்கு எதிராக 322 உறுப்பினர்கள் வாக்களித்தனா. மொத்தமுள்ள 323 உறுப்பினர்களில் 290 பேர் தற்போதுள்ள 14 நாட்களை வேண்டுமானால், 28 நாட்களாக அதிகரிககலாம். 90 நாட்கள் காவலில் வைத்து விசாரிக்க நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்று உறுதியாகக் கூறிவிட்டனர். எதிர்க்கட்சியினர் மற்றும் சிவில் உரிமைக் கழகங்களைச் சேர்ந்தவர்கள் இது மனித உரிமைக்கு எதிரானது என இந்த சட்ட மூலதிற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் ரொனி பிளேயர் கொண்டு வந்த திருத்தச்சட்டமூலம் தோல்வியடைந்ததை அடுத்து அவர் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளார். இந்நிலையில், ரொனி பிளேயர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும என்ற கோரிக்கை பரவலாக எழுந்துள்ளது. கடந்த மூன்று முறை பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட ரொனி பிளேயரின் பதவிக்காலம் முடிவடையும் நேரம நெருங்கிவிடடது. 'இது ஒரு முடிவின் தொடக்கம' என அந்நாட்டு பத்திரிகைகள் வர்ணித்துள்ளன. (ற)

## மும்பை தொடர் குண்டுவெடிப்பு

# அபு சலீம் - மோனிகா பேடி இந்தியாவிடம் ஒப்படைப்பு



(லிஸ்பன்)

மும்பை தொடர் குண்டு வெடிப்பில் முக்கிய தொடர்புடையவன் எனக் கருதப்படும் நிழல் உலக தாதா அபு சலீம் மற்றும் அவனது காதலி மோனிகா பேடி ஆகியோரை போர்த்துக்கீசிய அதிகாரிகள் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

அவர்களை நாடு கடத்த லிஸ்பன் உச்சநீதிமன்றம் ஒப்புதல் கொடுத்ததை அடுதது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மும்பையில் கடந்த 1993ஆம் ஆண்டு தொடர்குண்டுகள் வெடித்தன. இதில் 257 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர். ரூ.30 கோடிக்கும் மேல் பொருட்சேதம் ஏற்படடது. இந்தக் குண்டுவெடிப்பில் நிழல் உலக தாதாக்கள் தாவூத் இப்ராகீம், அபுசலீம் ஆகியோருக்கு தொடர்பு இருப்பது புலன்விசாரணையில் தெரியவந்தது.

இதனையடுத்து இவர்கள் இருவரும் சிபிஐ வலையில் சிக்காமல் வெளிநாடுகளுக்கு தப்பி ஓடிவிட்டனர். இந்த நிலையில் அபுசலீம் மற்றும் அவனது காதலி மோன்கா பேடி ஆகியோரை போர்த்துக்கல் பொலிஸார் கைது செய்தனர். போலி கடவுச்சீட்டில் தங்களது நாட்டில் நுழைய முயற்சி செய்ததாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

போர்த்துக்கல் சிறையில் அடைக்கப்பட்ட இந்த இருவரையும் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என இந்திய மத்திய புலனாய்வு குழுவினர் போர்த்துக்கல் அதிகாரிகளிடம் கோரிக்கை வைத்தனர்.

இதனை எதிர்த்து இந்தியாவிடம் தங்களை ஒப்படைக்கக்கூடாது என அபுசலீமும், மோனிகா பேடியும் அங்குள்ள நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர். இந்த விவகாரம் கடந்த 3 வருடங்களாக இழுத்தடிக்கப்பட்டது. கீழ் கோர்ட்டு, உயர் நீதி மன்றம், உச்ச நீதிமன்றம் பின்னர் அரசியல் அமைப்பு நீதிமன்றம் என கடைசிவரை சென்று அவர்களின் கோரிக்கை மறுக்கப்பட்டது.

இதனையடுத்து அவர்கள் இருவரையும் போர்த்துக்கீசிய அதிகாரிகள் போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் வைதது இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைத் தனர்.

அங்கிருந்து அவர்கள் இருவரும் நேற்று அதிகாலை 2 மணிக்கு மும்பை கொண்டு வரப்பட்டனர்.

இதன் காரணமாக லிஸ்பனிலிருந்து டெல்லிவரை உள்ள எல்லா விமான நிலையங்களிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. மும்பையிலிருந்து அவர்கள் டெல்லிக்குக் கொண்டு செல்லப்படவுள்ளனர். (ற)



மறைந்த முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணனின் பூதவுடல் நேற்று முன்தினம் மாலை தகனம் செய்யப்பட்டது. இறுதி அஞ்சலிக்காக அவரது உடல் அவரது வாசஸ்தலத்தில் வைக்கப்பட்டுள்ளதையும், டாக்டர் அப்துல்கலாம் சோனியாகாந்தி, மன்மோகன் சிங் ஆகியோர் உட்பட தலைவர்கள் பலரும் இறுதி அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

# சச்சின் 42

## முன் பார்வை

என். சொக்கன்

# ஒரு புயலின் கதை

இந்தியாவிலும் ஷார்ஜாவிலுமாக, 1998இல் சச்சின் தனி மனிதராக, பலமான ஆஸ்திரேலிய அணியை அடித்துத் துவைத்து, பிழிந்து, காயப்போட்டதை எல்லாம் டான் பிராட்மென் தொலைக் காட்சியில் பார்த்து ரசித்திருக்கிறார். அப்போது தான், பழம் பெரும்கிரிக்கெற் சர்தனையாளர்களான பாரி ரிச்சர்ட்ஸ், ஆர்தர் மோரிஸ், கேரி சோபர்ஸ் போன்ற சிறந்த வீரர்களுக்கு இணையாக சச்சின் விளையாடுகிறார் என்று குறிப்பிட் டார் பிராட்மென். அதன்பின்னர், சச்சினின் எந்தப் போட்டியையும்பிராட்மென் தவற விடுவதே இல்லை.



அப்போதுதான், சச்சின் ஆடுவதை நேரில் பார்க்கவேண்டும் என்கிற தனது ஆர் வத்தையும் தெரிவித்திருக்கிறார் பிராட்மென்.

அவருடைய சொந்தஊராகிய அடிலெய்டில், சச்சின் ஏற்கனவே ஒரு முறை விளையாடியிருக்கிறார் என்றாலும், அப்போது பிராட்மெனின் மனைவிக்கு உடல் நிலை சரியில்லாததால், அவர் அந்தப்போட்டியைப் பார்க்க முடியவில்லை. மீண்டும சச்சின் ஆஸ்தி ரேலியாவுக்கு விளையாட வருவது 1999ஆம் ஆண்டு இறுதியில் தான் என்பதால், அதற்கு முன்பே சச்சினைப் பார்க்க விரும்பினார் பிராட்மென்.

1998 ஆகஸ்டில், பிராட்மென் தனது 90வது பிறந்த நாளைக் கொண்டாடினார். அந்த விழாவில் கலந்து கொள்ளவும், டான் பிராட்மென் அவர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசவும் சச்சினுக்கு சிறப்பு அழைப்பு அனுப்பப்பட்டது. உடனடியாக ஆஸ்திரேலியாவுக் குப் பறந்தார் சச்சின்.

ஆகஸ்ட் 27ஆம் திகதி மதியம், அடிலெய்டில் இருக்கும் பிராட்மென் இல்லத்தில் சச்சினும், அவரது நீண்டநாள் சிநேகிதரான ஷேன் வார்னும் பிராட்மெனைச் சந்தித்தார்கள்.

'சர்.டான் அவர்களைச் சந்திக்கப் போகிறேன் என்ற உண்மையை என்னால் நம்பக் கூட முடிய வில்லை. உடம்பெல்லாம் பதற்றமும் நடுக்கமும் இருந்தது. அவரை நேரில் பார்த்தபோது அவரிடம் என்னகேட்பது என்று கூட எனக்குத் தெரியவில்லை' பிராட்மென் சந்திப்புக்குப் பின் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் சிலிர்ப்போடு குறிப்பிட்டார் சச்சின்.

முக்கால் மணி நேரத்துக்கும் மேலாக அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். தன்னுடைய பிரமிப்பு கலந்த பதற்றத்திலிருந்து இன்னும் விலகாத சச்சின், சில பேட்டிங் நுணுக்கங்கள் பற்றி பிராட்மெனிடம் கேட்டறிந்தார். பெரிய போட்டிகளுக்கு முன் எப்படி தயார் செய்துகொள்வது என்றும் கேட்டுக் கொண்டார்.

அன்றைய சந்திப்புக் குறித்துப் பேசும்போதெல்லாம் சச்சினிடம் பெருமிதமும், நெகிழ்ச்சி உணர்வும் பொங்குகிறது. 'மிகப் பெரிய சாதனையாளராகிய பிராட்மென், எந்தக் கர்வமோ, இன்றைய கிரிக் கெற்றர்கள் பற்றிய அலட்சிய உணர்வோ இல்லாமல் என்னோடு மிக இயல்பாகப் பேசியதும், என்னைப் பற்றிய விபரங்களை அன்போடு கேட்டுக்கொண்டதும் என்னை ரொம்பவே நெகிழச் செய்துவிட்டது. அந்த சந்திப்பை என்னால் எப்போதும் மறக்க முடியாது'



2001இல் சர்.டான் பிராட்மென், தனது 92வது வயதில் காலமானார். அவரது மரணத்துக்குப் பின், அவரது 'கனவு அணி' பட்டியல் வெளியிடப்பட்டது. 'கனவுஅணி' என்பது, அதைத் தேர்ந்தெடுக்கிறவர், தனக்கு விருப்பமான ஆட்டக் காரர்களைத் தொகுத்து ஒரு கற்பனையான அணி உண்டாக்கு வது. அந்த அணியில் இடம்பெறுகிற வீரர்கள் வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்தவர்க ளாக இருக்கலாம். முதல் ஆள் விளையாடிய காலத்தில், இரண்ட ாவது ஆள் பிறக்காமலே இருந்திருக்கலாம்.

ஆனாலும் திறமைசாலிகளான அவர்கள் அனைவரையும் கற்பனையாக ஒரே இடத்தில் சேர்த்து வைத்துப் பார்ப்பதில் ஒரு சந்தோஷம் இருக்கிறதில்லையா? அது தான் 'கனவு அணி'களின் அடிப்படை.

பல ஆண்டுகளாக கிரிக்கெற்றை கவனித்து வந்த சர்.டான் பிராட்மென், தன்னுடைய விருப்ப வரிசையில், உலகின் தலைசிறந்த கிரிக்கெற் வீரர்கள் பன்னிரண்டு பேரை அவருடைய 'கனவு உலக டெஸ்ட் அணி'யில் அமைத்தி ருந்தார்.

அந்தப் பட்டியலில் இடம்பெற்றவர்களில் ஒரே ஒரு இந்தியர்-சச்சின் தான்! அதுமட்டுமில்லை, இப்போது கிரிக்கெற் விளையாடிக் கொண்டிருக்கிற வீரர்களில், அந்தப் பட்டியலில் டான் பிராட்மென் குறிப்பிட்டிருப்பது சச்சின் ஒருவரைத்தான்! பிராட்மெனின் மனதுக்குப் பிடித்தவராக சச்சின் இருந்தார் என்ப தெல்லாம் சரி. ஆனால் யாரோடும் இதுவரை ஒப்பிடப் படாத இணையற்ற பிராட்மெனை, அவரே சச்சினுடன் ஒப்பிட்டுப் பேசியிருப் பது எத்தனை தூரம் உண்மை?

பிராட்மென், சச்சின் இருவரின் ஆட்டத்தையும் பார்த்திருக்கிறவர்கள், அவர்களுடைய ஆட்ட பாணியில் பெருமளவு ஒத்துப் போவது உண்மை தான் என்று சொல்கிறார்கள். ஆட்ட நுணுக்கங்களைக் கடந்து, இந்த இருவரின் புள்ளி விபரங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், சச்சின் டான்.

பிராட்மெனுக்குப் பக்கத்தில் வருகிறாரா?ரொம்ப தயக்கத்துடன் இந்தக் கேள்விக்கு 'இல்லை'என்று பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. டெஸ்ட் போட்டிகளில் சச்சினின் சராசரி இன்னும் அறுபதைக் (57.39) கூடத் தொடரவில்லை.

கிட்டத்தட்ட நூறு ரன்கள் சராசரி (99.94) வைத்திருக்கும் பிராட்மெனை, இந்த விஷயத்தில் சச்சின் மட்டுமில்லை, இப்போது விளையாடுகிற எந்த வீரராலும் எட்டிப் பிடிக்க முடியாது என்று தோன்றுகிறது.

பிராட்மென் ஒரு சகாப்த வீரர். அவரோடு சரிசமமாக ஒப்பிடும் அளவுக்கு சாதனைகளைச் செய்தவர்கள் இதுவரை யாரும் இல்லை.

ஆனால், இப்போது விளையாடிக் கொண்டிருக்கும் வீரர்களில், யார் பிராட் மெனின் சாதனைகளுக்கு ஓரளவேனும் நெருக்கத்தில் வரக்கூடும் என்று யோசித்தால், ஒரு வீரரின் பெயர்தான் கிடைக்கிறது. அதைத்தான் பிராட்மென் சொல்லி இருக்கிறார்!

*(தொடரும்)*

# கடற்றொழிலாளர்களுக்கு உதவி

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு 70 இலட்சம் ரூபா பெறுமதியான படகுகள், இயந்திரங்களை கடற்றொழில் அமைச்சு இலவசமாக வழங்கவுள்ளது.

கொழும்பு சீனோர் நிறுவனத்தின் அனுசரணையுடன் கடற்றொழில் அமைச்சு வழங்கவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட 20 பயனாளிகளுக்கு இப் படகுகள், இயந்திரங்களை வழங்க யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (த-35)

## இளைய தலைமுறையினரின் ஊடாக

# அபிவிருத்தி இலக்கை எட்டுவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

இளைய தலைமுறையினருக்கு புதிய தொழில்நுட்பத்தையும், அறிவையும் வழங்கி நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகுமென நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் கல்வி, சுகாதார, நலன்புரித்துறைகளை மேம்படுத்த வேண்டியுள்ளது.

நவநாகரிக யுகத்தின் பிரதான பங்காளியான இளைஞர், யுவதிகளின் சுபீட்சத்தையும் உறுதி செய்வது அவசியமானதாக மாறியுள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு வரவு-செலவுத் திட்டத்தில் விஞ்ஞான நிதித்திட்டத்திற்கு கூடுதல் நிதியொதுக்கப்பட்டது.

இவ்வாறு வருடாந்தம் கல்விக்காக ஒதுக்கப்படும் தொகையும் அதிகரிக் கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தேசிய விஞ்ஞான தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட விசேட வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே நிதியமைச்சர் இவற்றைத் தெரிவித்துள்ளார். (ந-9)

# இரு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுக்கு அமெ.1 இலட்சத்து 30000 டொலர் நிதியுதவி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள இரு அமைப்புக்களுக்கு அமெரிக்க அரசாங்கம் நிதியுதவி அளிக்கவுள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி தேர்தலுக்கான கண்காணிப்பு பணியில் பவ்ரல் அமைப்பு மற்றும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் ஆகியவை ஈடுபட்டுள்ளன.

இந்த இரு அமைப்புகளும் நீதியானதும் நியாயமானதுமான தேர்தலுக்காக தமது பணிகளை மேற்கொண்டு வருவதால் மொத்தம் 1 இலட்சத்து 30ஆயிரம் அமெரிக்க டொலர் நிதியுதவி அளிக்கப்படுமென்று அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இரண்டு அமைப்புகளுக்கும் அண்மையில் ஜப்பானிய அரசாங்கம் 1இலட்சம் அமெரிக்க டொலர் நிதியுதவியை அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## மகரஜோதிப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடத்தின் 48நாட்கள் மண்டல பூஜையோடு கூடிய மகர ஜோதிப் பெருவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி மாதம் 2ஆம் திகதிவரை கொச்சிக்கடை ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் அருள்ஜோதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ)

## பணி நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 17ஆம்திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் காரணமாக எதிர்வரும் 14ஆம் திகதியிலிருந்து 18ஆம் திகதி வரை காணி மாவட்டப் பதிவகத்தில் பிறப்பு, இறப்பு,விவாகம், காணி தொடர்பான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணிகள் நடைபெறமாட்டாதென்று யாழ்ப்பாண காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (த-49)


அன்பு வாசகர்களே..

உங்கள் வலம்புரியின் ஆறாவது ஆண்டின் நிறைவில் பல பக்கங்களைக்கொண்ட

வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்

வெளிவரவுள்ளது.

கல்வி. மருத்துவம். உளவியல். சோதிடம். ஆன்மீகம். விஞ்ஞான ஆராய்ச்சிகள். வரலாறு. பொருளியல். சமூகவியல். அரசியல். கவின்கலை தொடர்பான பல்துறைசார் ஆக்கங்கள் இச்சிறப்பிதழில் இடம்பெறவுள்ளன.

துறைசார் அறிஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்களிடம் இருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

உங்கள் ஆக்கங்களை

பிரதம ஆசிரியர்
வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்
வலம்புரி
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

நிறைவு விழாச் சபை, வலம்புரி

மனிதர்கள் இன்னும் பண்பாடு அடைய வில்லை. ஓநாய்க்கூட்டங்கள் உணர்ச்சி இன்னும் அவர்களிடம் குடிகொண்டு இருக்கி றது. -ப்ராய்டு-

வலம்புரி

## தேடிவைத்த தேட்டம் போகிறது தடுப்பாரும் இல்லை தட்டிக்கேட்பாரும் இல்லை

யுத்த விமானங்களின் குண்டு வீச்சு, செல் தாக்குதல் என்பவற்றால் உறக்கம் இழந்த யாழ்ப்பாணத்து மக்கள் யுத்தநிறுத்த உடன் படிக்கை ஏற்பட்டது கண்டு மகிழ்வுற்றனர்.

இனிமேலாவது நிம்மதியாக உறங்கலாம் என்பதே மகிழ்விற்கான காரணம்.

எனினும் அந்த மகிழ்வு நீண்டு நிலைக்காது போயிற்று. செல்வீச்சு, பொம்மர்த்தாக்குதல் என்பன இல்லையாயினும் அந்த நேரத்திலும் திருடர்கள் வீடு புகுந்து தேடிவைத்த தேட் டத்தை வாரிச்சுருட்டிக்கொண்டு போகின்ற கொடூரமே உறக்கம் இழப்பதற்கு காரணமா கும்.

தற்போது யாழ்ப்பாணத்தில் திருடர் கூட் டம் பயங்கரமாக வளர்ச்சி கண்டுள்ளது.

தென்னிலங்கையில் இருக்கின்ற பாதாள உலக கோஷ்டிக்கு ஈடாக யாழ்ப்பாணத்தில் திரு டர் கூட்டம் என்று கூறும் அளவிற்கு நிலைமை மோசமாகி விட்டது.

இது விடயத்தில் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுப்பதாக இல்லை. கைது செய்யப்பட்ட திரு டர்கள் ஏதோ ஒரு வகையில் சட்டத்தின் பிடி யிலிருந்து தப்பிக்கொள்கின்றனர்.

இதற்கு பொலிஸாரும் உடந்தையோ என்று சந்தேகிக்கும் அளவிற்கு பொலிஸாரின் நட வடிக்கைகள் உள்ளன. யாழ்ப்பாணத்தில் வேக மாக அதிகரித்து வரும் திருட்டுச்சம்பவங்கள் குறித்து அரச உயர் அதிகாரிகள் தகுந்த நடவடிக் கையெடுக்கத்தவறின் யாழ்ப்பாணத் தில் மக்களின் இருப்பு கேள்விக்குறியாகும்.

குறிப்பாக கல்வியியலாளர்கள் யாழ்ப்பாண மண்ணை விட்டு வெளியேறும் அபாயம் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

கடந்த கால யுத்த சூழ்நிலை தமிழர் தாய கத்தில் இருந்திருக்கூடிய புத்தி ஜீவிகளை இடம் நகர்த்தியது.

இது தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் கல்வித்தரத்தை-அறிவியலை நாசகாரம் செய்வதற்கு போட்ட சதித்திட்ட மாகும்.

இந்நிலையில் எஞ்சியிருக்கக்கூடியவர்களை யும் யாழ்ப்பாணத்தில் அடிக்கடி-பரவலாக நடக்கும் திருட்டுக்கள் வெளியேற்றி விடலாம்.

திருடர்களின் நுட்பம் பொதுமக்களை அதிர்ச் சிக்குள்ளாக்கியுள்ளது. சில வேளைகளில் வீட்டு உரிமையாளர்கள் விழித்துக்கொண்டால் அவர் களை கொலை செய்வதற்கும் திருடர்கள் தயாராக இருப்பதை அவர்களின் நடவடிக் கைகள் உறுதிசெய்துள்ளன.

எனவே யாழ்ப்பாணத்தில் நடைபெறும் திருட்டுக்களை கட்டுப்படுத்த உரியநடவடிக் கைகள் உரியவர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

# எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டாம்

## தேசிய அமைதிப் பேரவை வேண்டுகோள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டாம் என்று தேசிய அமைதிப் பேரவை வேண்டு கோள் விடுத்துள்ளது.

தேசிய அமைதிப் பேரவை இது தொடர்பில் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அவ் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதாக வடக்கு-கிழக்கில் உள்ள அமைப்புகள் அறிவித்துள்ளன. ஸ்ரீலங் காவினது தேர்தல்கள் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினை களுக்கு எப்போதும் தீர்வு கிடைத்ததில்லை என்று அந்த அமைப்புகளின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

தமிழர் பிரச்சினைக்கு தென்னிலங்கையால் மட்டும் தீர்வுகாணமுடியாது. வடக்கு-கிழக்கு மக்களினது ஒத்துழைப்பும் இதற்கு அவசியமாகும்

விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் உள்ள வாக் காளர்கள் வாக்களிப்பதற்கான கொத்தணி வாக்குச் சாவடிகளை இராணுவ முன்னரங்க காவல் நிலைகளிலி ருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவில் அமைத்திருப்பது வருத்தத்திற்குரியது. தமிழ்மக்கள் வாக்களிப்பதை நேரிடையாகவோ மறைமுகமாகவோ தடுக்கப்படுவது ஏற்க முடியாதது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் 'கொமன்வெல்த்' அமைப்பினர்!

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் கொமன் வெல்த் அமைப்புக் குழுவினர் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

மொரீசியஸ் நாட்டு முன்னாள் ஜனாதிபதி ஈச்சாம் உதீம தலைமையிலான 6பேர் அடங்கிய கொமன் வெல்த் குழுவினர் தேர்தல் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். தேர்தல் பரப்புரைகள்,வாக்களிப்பு, வாக்கு எண்ணிக்கை உள்ளிட்டவைகளை இக்குழு கண்காணிக்கும்.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவின் வேண்டுகோளையேற்று தமது குழுவை கொமன் வெல்த் அமைப்பு இலங்கைக்கு அனுப்பியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளின் பார்படாஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சிந்திய பார்ரோ திரினாட-டொபாக கோவின் செனட்டர் தியன மகாபீர், இங்கிலாந்தின் தேர்தல ஆணையாளர் கரம்சித் சிங் வங்கதேசத்தின் நீதியான தேர்தல் கண்காணிப்புக் கூட்டமைப்பின் செயலாளா நாயகம் பெரோஸ் ஹசன்,போட்ஸ்வானாவின் சுயாதீன தேர்தல் ஆணை யத்தின் பிரதிச் செயலாளர் மர்தாசையத் ஆகியோர் இக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். (ற)

# அனுதாபத்தைப் பெற மஹிந்தவின் கூட்டங்களில் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறலாம்

## எச்சரிக்கிறது ஐ.தே.க.

ஜனாதிபதித் தேர்தலில் அனுதாபத்தை பெறுவதற்காக சுதந்திரக்கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் எதிர்வரும் நாட்களில் துப்பாக்கிச் சூடோ, குண்டுவெடிப்போ இடம்பெறக் கூடும் என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் அக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இது தொடர்பில் கூறுகையில்,அனுதாபத்தைப் பெறுவதற்காக குண்டுவெடிப்புக்கள் மற்றும் துப்பாக்கிச் சூடுகளை மஹிந்தவின் தரப்பினர் மேற்கொள்ளக்கூடும் என்பதால மக்கள் அவதானமாக இருக்கவேண்டும்.

மஹிந்தவின் கூட்டஙகளில் சிறிய அளவிலான குண்டு வெடிப்போ, குண்டு துளைக்காத உடை அணிந்த நிலை யில் இருக்கும் மஹிந்த மீது போலியாக துப்பாக்கிச் சூடோ நடத்தப்படக் கூடும் என்று நம்பிகையான இடத்திலிருந்து எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதுபோன்ற மலிவான உத்திகளை மக்கள் அவதானித்து வாக்களிக்க வேண்டும். வரவு-செலவுத் திடட அறிக்கை யும் தோல்வி அடைந்துவிட்ட நிலையில், இதுபோன்ற அனுதாப வாககுகளைப்பெற அவர்கள் முயற்சிசெய்து வருகின்றனர்.எதிர்வரும் நாட்களில் தேர்தலைச் சீர்கு லைக்கும் வன்முறைகள் இடம்பெறக்கூடும் என்று எதிர் பார்க்கிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# கொழும்பு துறைமுக சுற்றாடல் பகுதியில் கடற்படை பாரிய பாதுகாப்பு ஒத்திகை

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்திலும், அதன் சுற்றுப்புறங்க ளிலும் நேற்று முன்தினம் காலை கடற்படையினர் பாரிய பாதுகாப்பு ஒத்திகையொன்றை மேற்கொண்டுள்ளனர்.

துறைமுகத்தின பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள் ளும் மாதாந்த ஒத்திகையாக இது திட்டமிடப்பட்டிருந் ததாக கொழும்பு துறைமுகத்தின் பாதுகாப்புககுப் பொறுப்பான துறைமுக ரங்கல கடற்படை முகாம் கடற் படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த ஒத்திகையின் போது 100ற்கும் மேற்பட்ட கடற் படையினர், மோப்பநாய்கள்,உந்துருளிகள்,மருத்துவ காவு வண்டிகள், குண்டு செயலிழக்கச் செய்யும் படை யினர், ரோந்துப் படகுச் சேவையினர், பொலிஸார் ஆகியோா கலந்துகொண்டனர்.

துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பல்கள், கொள் கலனசாலைகள், களஞ்சியங்கள், கப்பல் கட்டும் வேலைத் தளம் உட்பட முக்கிய கட்டடத் தொகுதிகளிலிருந்து அல்லது உள்ளக பகுதி, வெளிச்சுற்றாடல், மற்றும் கடல் ரோந்து பகுதிகள் ஊடாக திடீரென மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை முறியடிப்பது தொடர்பாகவே இந்த ஒத்திகை இடம்பெற்றது.இதேவேளை, துறைமுக ஊழியர்கள் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுவது அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்ற செயற்திட்டங்களும் செய்து காட்டப்பட்டுள்ளன.

துறைமுக சுற்றுமதில் பகுதியை அண்மித்த போக்கு வரத்துப் பாதையில் பொதுமக்களின் பயணங்களுக்கு இடையூறு ஏற்படாதவகையில் வாகனப்போக்குவரத்து சில நிமிடங்கள் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.கடற்படையினரின் இந்த ஒத்திகை நடவடிக் கையின் போது கொழும்பு கோட்டையில் இருந்து முகத்துவாரம வரையிலான பகுதிக்குள் அமைக்கப்பட்டிருக்கும் துறைமுக சுற்று வேலிப்பகுதி பலத்த பாதுகாப்பிற்கு உட்படுத் தப்பட்டிருந்தது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத் தலுக்கு மத்தியில் திடீர் தாக்குதல் ஒன்றை முறியடிக்க கடற்படையினரை துறைமுகத்திற்குள் உஷார் நிலை யில் வைத்திருக்க இவ்வாறான ஒத்திகை நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# புதிய அலுவலகத் திறப்புவிழா

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு உருத்திரபுரத்தில் அமைக கப்பட்ட புதிய உப அலுவலகக் கட்டடம் நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மங்கள விளக்கினை சிவநகர் கிராம சேவகர் வைத்தீஸ்வரமூர்த்தி ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக்கொடியினை அரசியற்துறைத் துணைப் பொறுப பாளர் சோ.தங்கனும், தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடி யினை கிளிநொச்சி மாவட்ட புனர்வாழ்வுக்கழகப் பணிப பாளர் பூங்குன்றனும் ஏற்றிவைத்தனர்.

புதிய அலுவலகத்தின் பெயர்ப்பலகையை கிளிநொச்சி மாவட்ட விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தம் திரை நீக்கம் செய்துவைக்க, புதிய கட்டடத்தினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாய கம் திறந்து வைத்தார்.

மேலும், திட்ட இணைப்பாளர் அலுவலகம், நிதிப் பகுதி அலுவலகம், இணைப்பாளர் அலுவலகம் போன்ற வற்றை முறையே கணேசபிள்ளை வணபிதா மதுரநாய கம், அகதிகள் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் றீகன் ஆகியோரும் திறந்துவைக்க, நிறுவனத் தலைவர் பரஞ் சோதி தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. சிறப்புரை யினை அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் உட்பட பலர் வழங்கினர். (ற)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



'உலகத்திற்கு இதனால் என்ன நன்மை?' என்று அசட்டுத்தனமாக கேட்காதே. உலகத் தைப் பற்றிய கவலை உனக்குவேண்டாம். அன்பாக இரு. எதையும் விரும்பிக்கேளாதே. அன்பாயிரு. பிரதிபலன் எதையும் எதிர்பாராதே. அன்புசெய்.

சுவாமி விவேகானந்தர்





நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற யாழ்ப்பாண தமிழ் மாணவர்களின் எழுச்சி மாநாட்டில்,யாழ். மத்திய கல்லூரி மாணவன் சி.ரங்கேஸ்வரன் தமிழீழ தேசியக் கொடியினை ஏற்றுவதையும் ,யாழ். வேம்படி கல்லூரி மாணவி பொதுச் சுடரினை ஏற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# ஐரோப்பிய கண்காணிப்புக் குழுத்தலைவர் நேற்று யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்டார்

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவர் குஷ்ணகான் நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்தார்.

யாழ்.வந்த அவர் தேர்தல் பணிகளைப் பார்வையிட்டார். பின்னர் அரச உயர் அதிகாரிகளை யாழ்.செயலகத்தில் சந்தித்த பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாரா ளுமன்ற உறுப்பினர்களை சந்தித்துப் பேசினார்.

இச் சந்திப்பில் ஜனாதிபதி தேர்தலின் போது நடைபெறும் வன்முறைகள் குறித் தும் விரிவாக கலந்துரையாடினார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு குறித்தும் அவர் கேட்டறிந்தார்.

அதன்பின் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இத னைத் தெரிவித்தார்.தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேச மக்கள் வாக்களிப்பதற்காக இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேச எல்லையில் இராணுவ முன்னரங்க பொலிஸ் நிலையங்களில் இருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள் ளது.

இதன் மூலம் தமிழ் மக்கள் வாக்களிக் கும் செயற்பாடுகள் அனைத்தும் தாமதமா கும். வாக்களிப்பு நாளன்று வன்முறைகள் ஏற்படும் என்ற அச்சம் இருக்கின்ற போதும் நாம் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் தொடர்ந்து ஈடுபடுவோம் 'எனத் தெரிவித் தார்.

பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்டிக்கோ கருத்து தெரிவிக்கையில்,

இப் பகுதி மக்கள் பலரும் வாக்களிப்புக் கான அடையாள அட்டைகளை வைத்திருக்க வில்லை எனத் தெரிவித் தார். (ச-4)

## அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் தினத்தன்று கடமையில் ஈடுபடும் சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக் கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெற வுள்ளது.

இக்கூட்டத்திற்கு அனைத்து சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

## 10 தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் ரயிலில் பயணம் செய்த 10தமிழ் இளைஞர்கள் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலையொட்டி கொழும் பில் நேற்று முன்தினம் தீவிர தேடுதல் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன 30க்கும் மேற்பட்ட இடங்களில் நடத்தப்பட்ட சோத னைகளில் 30 பேர் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டனர். பின்னர் 10 தமிழ் இளைஞர்களைத்தவிர அனைவரும் விடு விக்கப்பட்டனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 தமிழ் இளைஞர்களும் வடக்கு - கிழக்கு பகுதி யைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படு கின்றது. (ச)

# தேர்தலைப் பகிஷ்கரிக்க...

ஆட்சி பீடத்திற்கான -அதிகார பீடத்திற்கான போட்டியாக உள்ளதே தவிர எமது தாயகம் சுயநிர்ணயம் ,தன்னாட்சி ,விடுதலை முதலி யன பற்றிய சிந்தனை இல்லாதவர்களாகவே உள்ளனர்.

இதற்கு இவர்களது கூட்டுக்கட்சிகளின் இயல்புகள் இதனை வெளிப்படுத்தி நிற்கின் றன. ஜனாதிபதித்தேர்தல் முடிபுகள் எமது விடுதலைக்கு வழிகாட்டாது, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எவரும் எமது தாய கம் தழுவிய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை தரமாட்டார்கள்.

ஜனாதிபதித் தேர்தல் மக்கள் ஆட்சிக்கோ மக்களின் நலனுக்கோ அல்ல, ஆட்சிக்கும் அதிகார வெறித்தனத்திற்கும் உரியது.

மக்கள் நலன் எவையும் இதனால் மேம் பாடடைய மாட்டாது. தாயகம் ,சுயநிர்ணய் உரிமை ,தன்னாட்சி என்பன உரியவாறு வெளிப்படுத்தப்படவில்லை. ஆகையால் தமிழ்த்தேசியம் ஒட்டு மொத்தமாக ஜனாதி பதித்தேர்தலை பகிஷ்கரித்து எமது அபிலா சைகளுக்கு எதிரான தேர்தல் என்பதை சர்வ தேசத்திற்கு வெளிப்படுத்தி எமது ஒற்றுமை யையும் , ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத் துவோமென அவ்வறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச)

## வருடாந்த கலைவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும்16 பாலர் பாடசாலைகள் இணைந்து நடாத்தும் 40வது வருடாந்த கலைவிழா நாளை காலை 9.30மணிக்கு நாவலர் இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கழகத்தலைவர் திருமதி சறோஜினி ஜெய பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலம்புரியின் நிர்வாக இயக் குநர் சி.வெற்றிவேலாயுதம் பிரதமவிருந் தினராக கலந்து கொள்கின்றார். (ச)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக் கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறு தினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பளை மத்திய கல்லூரியில் நடைபெற வுள்ளது.

நிரந்தர் நியமனங்களை எதிர்பார்த்து காத்திருக்கும் தொண்டர் ஆசிரியர்களின் நலன் தொடர்பாக இக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதால் அனைத்துத் தொண் டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட தமிழீழ கல்விக் கழகம் அறிவித்துள்ளது. (ச-108)






## யாழில் எழுச்சியுடன்...

தொடர்பாக மாணவர் பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர். இன்றைய மாணவர்களின் கள நிலைமை தொடர்பாக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர் சி.நவராஜ். பல் கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு இழைக் கப்பட்ட துரோகம் பற்றி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத்தலைவர் சி.விஜயரூபன். பாடத்திட்டத்தில் மறைக்கப்படுபவையும் நீக்கப்படுபவையும் பற்றி யாழ். கல்வி யியற்கல்லூரி உயர் பீடாதிபதி க.தனபாலன்.இலங்கையில் கல் விக்கொள்கையில் உள்ள குறைபாடுகள் பற்றி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் சி.சந்திரகுமார். தமிழ் மக்களின் மனிதாபிமான பிரச்சினைகளும் அவை தமிழ் மாணவர்களை பாதிக்கும் விதமும் பற்றி சாவகச்சேரி றிபேக்கல்லூரி அதிபர் சி.அருந்தவபாலன்.ஆழிப்பேரலையும் மாணவர்களும் பற் றி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகவியல் துறை தலைவர் ந.சண்முகலிங்கம் ஆகியோர் நடத்தினர். மாணவர்களுக் கிடையே தமிழ் மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக உங்கள் பதில்கள் எனும் தலைப்புக்களில் விடயங்கள் எடுத்து ஆராயப்பட்டன.ஆய்வரங்கங்கள் முடிவடைந்ததைத் தொடர்ந்து மாணவர்களின் எழுச்சிப்பிரகடனம் வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பங்கு பற்றி மாணவர் கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு தற் போதைய நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பின் வரும் குழுக்களும் அமைக் கப்பட்டன.

1.தினமும் மாணவர்களின் பிரச் சினைகளை ஆராய்ந்து தரவுகளைச் சேக ரிக்கும் குழு.

2. மாணவர்களின் பாடசாலைகளில் இருந்து இடைவிலகல் மற்றும் வறுமை தொடர்பான விடயங்களை சேகரித்தல்.

3. பெண்கள் மட்டும் அடங்கும் பெண் கள் அவையம்.

4. ஆரம்ப, இடைநிலை, உயர்தரம் ஆகியவற்றில் கல்விகற்கும் மாணவர்கள் தொடர்பான பிரச்சினைகள் ஆராய்வதற்கான குழு. (ச-132,133)


திருமண நல்வாழ்த்துக்கள்



மங்களகரமான இன்றைய நன்னாளில்

இல்லறம் எனும் நல்லறம் தனில் இணையும்

திரு.திருமதி பத்மரஞ்சன் விஜயலக்சுமி

தம்பதிகள் எல்லாச் சிறப்புகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ இறையருள்வேண்டி வாழ்த்துகின் றோம்.

வலம்புரிக் குடும்பம்

திருமணக்கார் (குளிரூட்டியது)

வாடகைக்கு

☆ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)

☆ விசேட வைபவங்கள் ☆ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம்கொண்ட) குளிரூட்டிய நவீனகார்கள், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.



தொடர்பு: ரட்ணம்

சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

T.P:0777-903090 077-3086939,0777-246117, 077-6018467

(c-9843)








இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.